REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஒகஸ்ட் 19 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்
92 1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 197 | Monday 19, August, 2024 | 12பக்கங்கள் | 50/-

## ஸ்ரீ தலதா மாளிகை இறுதி ரந்தோலி பெரஹரவின் வீதி உலா இன்று



கண்டி எசல பெரஹரவின் இறுதி ரந்தோலி பெரஹர வீதி உலா இன்று 04

# ஜப்பானிலிருந்து இந்தியா வரை பொருளாதார ஒத்துழைப்பு

## புதிய உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதே இலங்கையின் நோக்கம்

### 'உலகின் தெற்கு நாடுகளின் குரல்' மாநாட்டின் மூன்றாவது அமர்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரை



இலங்கையானது இந்தியாவுடன் நெருக்கமான பொருளாதார ஒருங்கிணைப்புடனும், ஜப்பான் முதல் இந்தியா வரை பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கைகளை ஏற்படுத்த எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 04



வங்காள விரிகுடா மற்றும் அதைச் சூழவுள்ள பிராந்தியங்கள் தற்போது அபிவிருத்தி மையமாக மாறி வருவதால், பிம்ஸ்டெக் (BIMSTEC) அமைப்பின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே பிம்ஸ்டெக் அமைப்பில் அங்கம் வகிக்கும்

### அரச ஊழியர்களது சம்பள அதிகரிப்பு;

# பொய் பிரசாரங்களுக்கு அரசாங்கம் பதில்

## அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன விளக்கம்



அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க ஊழியர் சம்பள அதிகரிப்பு முன்மொழிவு சர்வதேச நாணய நிதியத்தின் விதிமுறைகளின் அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு மாற்றமில்லாமல் இருக்கும். எந்த அரசாங்கமாக இருந்தாலும் சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகளின் அடிப்படையிலான கருத்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். வரவு செலவுத் திட்டத்தில் இந்த சம்பள அதிகரிப்பு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மற்றும் அது அமைச்சரவையின் ஒப்புதலையும் பெற்றுள்ளதென அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன, அரச ஊழியர்களின் பாரிய சம்பள அதிகரிப்புக்கு எதிரான பிரசாரங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தார்.

அமைச்சரவையில் வாழ்க்கைச் செலவு குறித்து வெளியிடப்பட்ட அறிக்கை 04

## "சிலுமின" பத்திரிகை செய்தியை மேற்கோள்காட்டி மனுஷ உரை



அநுராதபுரம் சல்காது மைதானத்தில் நேற்றுமுன்தினம் (17) நடைபெற்ற சுயேச்சை ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கன்னி பேரணியில் முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார இந்த வார சிலுமின பத்திரிகையின் பிரதான செய்தியை காட்டி வேகமாக உரை நிகழ்த்தியதை புகைப்படம் காட்டுகிறது.

## ஜனாதிபதி தேர்தலில் இ.தொ.கா ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு

### தேசிய சபை கூடி ஏகமனதாக தீர்மானம்



ஹற்றன் சுழற்சி நிருபர்

நாட்டில் கடந்த ஈராண்டு காலப்பகுதிக்குள் ஜனாதிபதியால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் மலையக மக்கள் தொடர்பான அவரின் அக்கறை உள்ளிட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் 04

# பிரதமர் தலைமையில் புதிய அரசியல் அணி

## உருவாக்குவதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பம்



ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்வந்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் புதிய அரசியல் அணியை உருவாக்குவதற்கான கலந்துரையாடல்கள் மேற்கொண்டு வருவதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அந்த அரசியல் சக்தியை கட்டியெழுப்ப பிரதமர் என்ற முறையில் தனது ஆசியையும் ஆதரவையும் தொடர்ந்து வழங்குவதாகவும் அவர் கூறினார். 04

### யாருக்கு ஆதரவு; தமிழரசுக் கட்சி

## தேர்தல் விஞ்ஞாபனம் வெளியான பின்பே முடிவு

பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியான பின்னரே ஜனாதிபதித் தேர்தலில் தாம் ஆதரவளிக்கவுள்ள வேட்பாளர் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்துள்ளது. வவுனியாவில் நேற்று (18) இடம்பெற்ற, இலங்கைத் தமிழரசுக் 04

## 500 ஐக் கடந்துள்ள தேர்தல் முறைப்பாடுகள்


### சட்ட மீறல்கள் தொடர்பில் 503



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சனிக்கிழமை (17) வரை 519 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 04

## இலங்கை வருகிறார் USA உயரதிகாரி

### பல விடயங்களை ஆராய்வார்



பெருங்கடல்கள் மற்றும் சர்வதேச சுற்றுச்சூழல் மற்றும் அறிவியல் விவகாரங்களுக்கான அமெரிக்காவின் தற்காலிக உதவிச் செயலாளர் ஜெனிபர் ஆர். லிட்டில்ஜோன் இலங்கை வரவுள்ளார். இம்மாதம் 17 04

### தந்தை செல்வா தூபிக்கு அஞ்சலி செலுத்தி


## தமிழ் பொது வேட்பாளரின் பிரசார பணிகள் ஆரம்பம்



தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரன் நேற்று ஞாயிற்றுக்கிழமை (18) காலை 9 மணியளவில் தந்தை செல்வா நினைவுத்தூபியில் அன்னாரின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். 04

### பருவமழை வீழ்ச்சியின் வேகம் அதிகரிப்பு;

## நீர் நிலைகளுக்கு அருகே வாழும் மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை



நாட்டில் சில பிரதேசங்களில் பெய்த கடும் மழையினால் களனி கங்கை, அத்தனகலு ஓயா, களுகங்கை, ஜிங் கங்கை மற்றும் நில்வளா கங்கை ஆகிய நதிகளின் தாழ்வான பகுதிகளில் வாழும் மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது. தற்போது நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலையில், எதிர்வரும் நாட்களில் மாற்றம் இடம்பெறும் என வளிமண்டலவியல் 04

## "பார் பர்மிட்" எனக்கிருந்தால் நான் பதவி விலகத் தயார்

### தயாசிறி MPக்கு வேலுகுமார் MP பகிரங்க சவால்



தயாசிறி சொல்வது போல் எனக்கு பார் பர்மிட் இலங்கையில் எந்த ஒரு மூலையிலாவது இருக்குமாக இருந்தால் எனது பாராளுமன்ற உறுப்புரிமையை விட்டு விலக நான் தயாராக இருக்கின்றேன். அதனை தயாசிறி நிரூபிக்க வேண்டும். இல்லையெனில் அவர் முன்வைத்த கூற்றை ஏற்று முதுகெலும்பு உள்ளவராக பாராளுமன்ற உறுப்புரிமையில் 04

### இரு பயிர்ச் செய்கை காலங்களுக்கு

## விவசாயிகளுக்கு இலவச உர வகை விநியோகம்



எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்குள் 55,000 மெற்றிக் தொன் பசளை உரம் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த விடயத்தை விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. உலக உணவுத் திட்டத்துடன் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது 04

## பெரும்பான்மை, சிறுபான்மை எனும் வேறுபாடு எனக்கு இல்லை

### நம்பிக்கை வைத்து வாக்களிக்க திலித் கோரிக்கை



தேர்தல் காலத்தில் வடக்கு அரசியல்வாதிகள் அதிகாரம் பகிரப்படும், 13ஆவது திருத்தம் அமுல்படுத்தப்படும் என்று குறிப்பிடப்படுவது தமிழ் மக்களை ஏமாற்றும் செயற்பாடாகும். பெரும்பான்மை, சிறுபான்மை என்ற வேறுபாடு என்னிடம் கிடையாது. நாம் அனைவரும் இலங்கையர் 04

## எமது ஆட்சியில் மத, கலாசார சீரழிவுகளுக்கு இடமில்லை

### வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க



தமது ஆட்சியில் மத கலாசாரங்கள் பேணிப் பாதுகாக்கப்படுவதுடன் மத மற்றும் கலாசார சீரழிவுகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். 04

## வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் இறுதி கட்டத்தில்

### அடுத்த சில தினங்களில் பணி ஆரம்பம்



எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்கு முன்னரான சரிபார்ப்பு நடவடிக்கைகள் தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளன.

உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டை அச்சிடுவதற்கான உத்தரவு அடுத்த சில தினங்களில் 04

92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# IMF திட்டத்தில் திருத்தம் மேற்கொண்டால் நாடு மீண்டும் வீழ்ச்சிப்பாதைக்கு செல்லும்!

## அநுராதபுரம் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க













சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் நாடு மீண்டும் வீழ்ச்சிப்பாதைக்குச் செல்லும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முதலாவது தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இது எமது ஆரம்பப் பயணம் மாத்திரமே. நாம் இன்னும் நீண்டதூரம் பயணிக்க வேண்டியுள்ளது. இது பிளவடைந்து செல்வதற்கான நேரமல்ல. இது மும்மதத்தினரும் இணைந்துள்ள இடமாகும். அதனாலேயே கட்சி வேறுபாடின்றி இன்று அனைவரும் எம்முடன் இணைந்துள்ளனர். அதனாலேயே நான் கட்சி வேறுபாடின்றி சுயாதீன வேட்பாளராக தேர்தலில் முன்னிலையாகியுள்ளேன்.

நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகி நெருக்கடியை எதிர்கொண்ட சந்தர்ப்பத்திலேயே நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்றேன். நாடு நெருக்கடியை எதிர்நோக்கிய போது முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவிவிலகினார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பதவிவிலகினார். எதிர்க் கட்சித் தலைவர் ஒலிம்பிக் போட்டியில் ஓடுவது போன்று ஓடி ஒளிந்தார்.

அனைவரும் நாட்டை பொறுப்பேற்கும் முயற்சியில் பின்வாங்கிச் சென்றார்கள். அவர்களுக்கு மத்தியில் நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்றேன்.இந்த நாட்டுமக்கள் தங்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தீர்க்கமான தருணம் வந்துள்ளது.

எரிவாயு, எரிபொருள் வரிசையுகத்தை நிறைவுக்குக் கொண்டுவந்தேன். மக்கள் எதிர்நோக்கிய நெருக்கடிகள் இன்னும் பல. மின்சாரமின்றி மக்கள் அவதியுற்றனர். இன்று இந்த நாட்டில் ஜனாதிபதியாகும் கனவில் உள்ள சஜித் பிரேமதாச, அநுரகுமார திசாநாயக்க போன்றோர் அப்போது எங்கு சென்றார்கள்?

மக்களின் துன்பம் அறிந்தவர்களாக இருந்தால் அவர்கள் அன்று இந்த நாட்டைப் பொறுப்பேற்றிருக்க வேண்டும் ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் முயற்சியின் போது, மக்கள் மீது வரிசுமத்தப்பட்ட போது மக்கள் எதிர்கொண்ட துன்பத்தை நான் அறிவேன்.

இன்று மக்கள் எதிர்கொண்ட சுமைகள் படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றன. மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன. காணி உரிமைகள் வழங்கப்படுகின்றன. வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு அரிசி மானியம் வழங்கப்படுகின்றது.

நாட்டை மீட்டெடுக்கும் திட்டத்தின் போது சர்வதேச நாணயநிதியத்தின் ஒத்துழைப்பு போன்று உலகின் 18 நாடுகள் எமக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தன. இந்த அனைத்துத் தரப்பும் எமக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தினை மறுசீரமைக்கப் போவதாக அநுரவும் சஜித்தும் கூறுகின்றனர். அவர்களின் இந்தக் கூற்று நாட்டை வீழ்ச்சிப்பாதைக்கு கொண்டு செல்லும் முயற்சியாகும்.அதாவது சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும்பட்சத்தில்நாடுமீண்டும் வீழ்ச்சிப்பாதைக்கு செல்லும்.

நாட்டிலுள்ள அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை அடுத்த வருடம் 55,000 ரூபாவாக அதிகரிக்க உள்ளோம். அடுத்த வருடத்தில் அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு 25,000 ரூபாவாக அதிகரிப்படவுள்ளது.

சிலிண்டர் விலை 6,000 ரூபா வரை உயரும் போது சஜித், அனுர போன்றவர்கள் எங்கே இருந்தனர் என்று கூற வேண்டும். அதற்கான பதிலை அவர்கள் வழங்கவில்லையாயின் தேர்தலில் போட்டியிடுவதற்குப் பொருத்தமற்றவர்களாவர். இந்த நாட்டின் பொருளாதாரத்தை சஜித்தோ அனுரவோ மீள கட்டியெழுப்பவில்லை. ஹர்ஷ டி சில்வாவோ, சுனில் ஹந்துன்நெத்தியோ கட்டியெழுப்பவில்லை.

மற்றைய தலைவர்கள் ஓடிப்போன வேளையில், முடியும் என்று நாட்டை மீட்க வந்தவர்கள் எம்மோடு உள்ளனர். அதனால் எனது அணியில் அனைவரும் ஒன்றுபட்டு முன்னோக்கிச் சென்று எதிர் காலத்தைப் பாதுகாப்போம்.

கடந்த காலத்தை மறந்துவிடக் கூடாது. அன்று நாட்டில் மின்சாரம் இருக்கவில்லை, இருளில் இருந்தோம். எரிபொருள் இருக்கவில்லை, நடந்து சென்றோம். எரிவாயு இருக்கவில்லை, சிலிண்டர் மட்டுமே இருந்தது, அதையும் விற்றோம். மருந்து இருக்கவில்லை, மக்கள் வீதிகளில் உயிரிழந்தனர். ஹோட்டல்கள் மூடப்பட்டன, தொழிற்சாலைகள் முடங்கின. அப்போது நானும் பிரதமரும் மட்டுமே நாட்டை ஏற்க முன்வந்தோம்.

மக்கள் கஷ்டம் புரிந்திருந்தால் ஆட்சியை ஏற்றிருக்க வேண்டும். எதிர்க் கட்சி எந்த வேளையிலும் அரசாங்கத்தைப் பொறுப்பேற்கத் தயாராக இருக்க வேண்டும். எரிவாயு சிலிண்டர் விலை ரூ.4900 இற்கு கூடியபோது அனுர, சஜித் எங்கு இருந்தனர்? இந்தக் கேள்விகளுக்கு அவர்கள் பதிலளிக்க வேண்டும்.

இன்று அனுராதபுரத்தில் ஆரம்பித்து சஜித், அனுரவிடம் இந்தக் கேள்விகளை எல்லா மேடைகளிலும் கேட்பேன். பதில் இருந்தால் கூறுங்கள், இல்லாவிட்டால் எனது மேடையில் இரு பக்கங்களில் வந்து அமருங்கள். அன்று உயர்வடைந்த சிலிண்டர் விலை இன்று குறைந்துள்ளது. அதனால் சிலிண்டர் சின்னத்தை ஏற்றுக்கொண்டேன். பெற்றோல், டீசல் விலைளையும் குறைத்துள்ளோம். பஸ் கட்டணமும் மின்கட்டணமும் குறைந்துள்ளன.".

**பிரதமர் தினேஷ் குணவர்தன:**

"அநுராதபுரம் மக்கள் ஆழமாகத் தீர்மானித்தே வாக்களித்துள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஆட்சி வழங்கப்பட்டபோது நீண்ட காலம் பயணிக்க முடியாதென எதிர்க்கட்சிகள் கூறின. ஆனால் நாம் இன்றைய நிலைமை வரையில் கொண்டு வந்திருக்கிறோம்.

நாட்டில் பொருளாதார நிலைத்தன்மை அவசியம். நாட்டில் அராஜக முறையில் அரசியல் செய்ய முடியாது. அகிம்சை வழியில் சென்று வெற்றி கொள்ள முடியும் என்பதை ஜனாதிபதி நிரூபித்துள்ளார். அரச தலைவர் ஒருவரிடம் நாடு கையளிக்கப்படும்போது அவருக்கு நாட்டை நிர்வகிக்கும் இயலுமை இருக்க வேண்டும்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அனுபவங்களைக் கொண்டு நாட்டைப் பொறுப்பேற்று முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்.

பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தி நம்பிக்கையை வழங்கியுள்ளார். கிராமங்களிலுள்ள இளையோரின் வாழ்க்கை மேம்பாட்டுக்கான திட்டத்தையும் ஜனாதிபதி தயார்படுத்தியுள்ளார்.

அதனால் ஜனாபதி வழங்கிய தலைமைத்துவத்தை தொடர்ந்தும் பாதுகாத்தால் அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்க முடியும்."

**அமைச்சர் டக்லஸ் தேவானந்தா:**

“கடந்த காலத்தில் எதிர்கொண்ட பிரச்சினைகளிலிருந்து பொருளாதார வீழ்ச்சியிருந்து எழுச்சியை நோக்கிக் கொண்டு வந்தவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. அவ்வாறான ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மட்டுமே. அதனால் அவருடன் சேர்ந்து பயணிக்க வேண்டியது அவசியம். நாட்டுக்கு இனி நல்ல காலம் பிறகும் என்று நம்புவோம்.”

**அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா:**

"நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடிய வேலைத்திட்டம் இருக்கும் தலைவருக்கே நாம் ஆதரவளிக்கிறோம். அப்படிப்பட்ட தலைவரை சுதந்திரக் கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது.

அதேபோல் வாக்குறுதி அரசியலுக்கும் நாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். சிலர் தமது புதல்வர்களை அரசர்களாக்க முயற்சிக்கின்றனர். ஆனால் நாட்டை மீட்ட தலைவருக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்".

**அமைச்சர் அலி சப்ரி:**

“கொவிட், உக்ரேன் யுத்தம் காரணமாக எம்மால் எதிர்பார்த்த பொருளாதார இலக்குகளை அடைய முடியவில்லை. பெரும் சரிவைச் சந்தித்தோம். 69 இலட்சம் பேருடைய எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ய முடியாமல் போனது. பல மணித்தியால மின்வெட்டு. 2022 ஏப்ரல் 4 ஆம் திகதி எவரும் நிதியமைச்சை ஏற்காத வேலையில் நான் ஏற்றுக்கொண்டேன். அப்போது அனைத்து கட்சிகளும் எமக்கு ஒத்துழைக்க வேண்டுமெனக் கோரினோம்.

நான் நிதியமைச்சராக இருந்தபோது, அப்போதைய ஜனாதிபதி எதிர்க்கட்சிகளுக்கு நாட்டை ஏற்க அழைப்பு விடுத்தார். நான் சஜித்துடன் பேசியபோது அவர் ஹர்ஷ எம்.பியுடன் பேசுமாறு கூறினார். அவர் மத்திய வங்கி ஆளுநரையும் நிதியமைச்சின் செயலாளரையும் அனுப்புமாறு கூறினார். அதனையும் செய்தோம். எதிர்கட்சித் தலைமையகத்தில் ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக அவர்களுக்கு விளக்கமளித்த பின்பு, நாட்டின் நிலைமை மோசமாக உள்ளதெனக் கூறிவிட்டு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஒதுங்கிவிட்டனர். அவர்கள் ஏற்க மறுத்த நாட்டைதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்று இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார்".

அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி, முன்னாள் அமைச்சர்கள் பீ.ஹரிசன், ஹரீன் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, அனுர பிரியதர்ஷன யாப்பா எம்.பி, இஷாக் ரஹ்மான் எம்.பி ராஜித சேனாரத்ன எம்.பி, எஸ்.எம். சந்திரசேன எம்.பி, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் அநுராதபுரம் மாவட்டத் தலைவரும் வடமத்திய மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான கஸ்தூரி அனுராதநாயக்க உட்பட பலரும் உரையாற்றினர்.













# நாட்டில் அபிவிருத்தி யுகம் உருவாக்கப்படும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



நாட்டொன்றைக் கட்டியெழுப்புவதற்கு தெளிவான வேலைத் திட்டங்கள் இருக்க வேண்டும். அரசாங்கம் ஒன்றுக்குள் மேல்மட்டத்திலிருந்து கீழ் மட்டத்திற்கு கருத்துகள் பரிமாறப்பட வேண்டும். கீழ் மட்டத்திலிருந்து மேல்மட்டத்திற்கு கருத்துக்கள் பரிமாறப்பட வேண்டும்.

களுத்துறை, பண்டாரகம நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டாவது வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போது எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

இதில், ஐக்கிய மக்கள் கூட்டணியைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் மற்றும் அப் பகுதியைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

"இன்று பல தரப்பினர் ஒன்றிணைந்துள்ளனர். நான் ஜனாதிபதியான பின்னர் மோசடியாகவும் இலஞ்சமாகவும் வழங்கப்பட்ட அனைத்து அனுமதிப் பத்திரங்களையும் ரத்து செய்வேன். அரசியல் இலஞ்சத்துடன் தொடர்புடைய அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் சட்டத்தின் முன் பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறான தவறுகளை செய்யாமல் சிந்தித்து செயல்படுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

எவரேனும் ஒருவர் கொள்கைத் திட்டத்துடனும் வழிகாட்டல்களுடனும் அரசியல் பயணங்களை முன்னெடுக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியுடனும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்புடனும் இணைந்து கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் பணத்துக்காகவும் ஊழலுக்காகவும் மோசடிகளுக்காகவும் இணையவில்லை. சிறந்த கொள்கைத் திட்டத்துடன் இணைந்து கொண்டிருக்கின்றனர்.

அபிவிருத்தி என்று தொகைகளைக் காண்பித்து பயனில்லை. அபிவிருத்தியை ஒவ்வொரு குடிமகனும் உணர வேண்டும். அதன் பிரதிபலனை அனுபவிக்க வேண்டும்.









இந்த நாட்டில் இருக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார். பொருளாதார வீழ்ச்சி நாட்டை சீரழித்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டை கட்டியெழுப்புவதற்கு நாம் தயார்.

நாட்டை மேலும் வலுப்படுத்துவதற்காக தாம் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறேன். ஆட்சியைப் பெற்றுக் கொண்ட பின்னர் மக்களுக்காக சேவை செய்வேன். இந்த நாட்டைக் கட்டி எழுப்புவதென்றால் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் அவசியம். பிரபஞ்சம், மூச்சு போன்ற வேலைத் திட்டங்களின் ஊடாக ஊழல் மோசடி திருட்டு என்பன இடம்பெறவில்லை என்பதால் பெருந்தொகையானவர்கள் இதற்கு உதவிகளை வழங்கத் தயாராக இருந்தனர் .

அரகலய போராட்டத்தின் பின்னர் அரசியல்வாதிகளின் மீது மக்கள் நம்பிக்கை இழந்திருக்கிறார்கள். ஆனாலும், எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு ஐக்கிய மக்கள் சக்தி மக்களுக்கு பாரிய சேவைகளை செய்திருக்கிறது. மத்திய வங்கியை சுயாதீன கட்டமைப்பாக மாற்றுவதற்கு இலஞ்ச ஊழல் சட்டமூலத்தை விட புதிய சட்டமூலம் ஒன்றைக் கொண்டு வந்தேன். ஊழலை தடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி பாரிய வேலை திட்டங்களை முன்னெடுத்து இருக்கிறது.

இந்த நாட்டுக்கு வெட்டிப் பேச்சுக்கள் அவசியம் இல்லை. காட்சிப்படுத்தல் அவசியமில்லை. அபிவிருத்திதான் தேவை. அபிவிருத்தி யுகத்தை உருவாக்கி, நவீன தொழில்நுட்பத்துடன் அனைத்து துறைகளையும் முன்னேற்றம் அடைய செய்து, புதிய தொழில்நுட்ப உபகரணங்களை வழங்கி, உற்பத்தியின் கொள்ளளவை அதிகரிக்கச் செய்து நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பேன்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஓகஸ்ட் 19 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN



தொழுகை நேரம்
சுபஹ் - 04.46
ளுஹர் - 12.16
அஸர் - 03.31
மஃரிப் - 06.26
இஷா - 07.38

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆவணி 03
ராகுகாலம் : காலை : 7.39 - 9.05வரை
சுபநேரம் : பகல் : 12.05 - 01.35வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

## ரஷ்யாவில் பாரிய நிலநடுக்கம்

**அளவுகோலில் 7 ரிக்டராக பதிவு**

ரஷ்யாவில் (RUSSIA) சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக சர்வ தேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. குறித்த நிலநடுக்கமானது ரஷ்யாவின் கிழக்கே உள்ள கடல் பகுதியில் நேற்று (18) அதிகாலை ஏற்பட்டுள்ளது.இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7 ஆக பதிவானதாக தெரிவிக்கப்படுகின்றது. நிலநடுக்கத்தையடுத்து அமெரிக்க தேசிய சுனாமி எச்சரிக்கை மையம் சுனாமி எச்சரிக்கை விடுத்த போதிலும், பின்னர் அது சுனாமி நிலை அல்ல என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் பசிபிக் பெருங்கடலில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படும் பகுதியில் ஏற்பட்டுள்ளதுடன், முதல் நிலநடுக்கத்திற்குப் பிறகு பல நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த கடற்பகுதியில் பல எரிமலைகள் உள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு விசேட உயரடுக்கு பாதுகாப்பு

**அரசாங்கம் தீர்மானம்**

உயிருக்கு அச்சுறுத்தல் உள்ள ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு விசேட உயரடுக்கு பாதுகாப்பை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான அச்சுறுத்தல்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டு வருவதாகவும், மதிப்பீட்டின் பின்னர் பெறப்படும் அறிக்கையின் அடிப்படையில் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ள வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தல் காலத்தில் வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை மேற்பார்வையிடுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் விசேட குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டது.

இந்த குழு எடுக்கும் தீர்மானங்களுக்கு அமைய, வேட்பாளர்களின் பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம், அச்சுறுத்தலுக்கு உள்ளான வேட்பாளர்களின் வீடுகளுக்கும், அவர்கள் நடமாடும் போது அவர்களுக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதி வேட்பாளர்கள் பங்கேற்கும் அனைத்துக் கூட்டங்களுக்கும் விசேட பாதுகாப்பை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பொலிஸ் நிலைய கட்டளைத் தளபதிகளுக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதியின் ஆலோசகராக மனுஷ நாணயக்கார நியமனம்



தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகராக மனுஷ நாணயக்கார நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

அரசியலமைப்பின் 41(1) பிரிவின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நியமனக் கடிதத்தை ஜனாதிபதி மனுஷ நாணயக்காரவிடம் கையளித்துள்ளார்.

# ரணில் விக்கிரமசிங்க வரலாற்று வெற்றியை பதிவு செய்வார்

**ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் சுப்பையா ஆனந்தகுமார்**



வடக்கு, கிழக்கு மக்கள் மற்றும் மலையக மக்கள் உட்பட அனைத்து மக்களின் பேராதரவுடன் ஜனாதிபதி தேர்தலில் எமது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வரலாற்று வெற்றியை பதிவு செய்வார். அவரின் அடுத்த ஐந்தாண்டுகால ஆட்சியே இலங்கைக்கு பொற்காலமாக அமையவுள்ளது என்று ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்றுபேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் எடுத்த முடிவு மக்களின் எதிர்பார்ப்பாகும். எனவே, ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியுடன் அணிதிரள வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

இது தொடர்பில் சுப்பையா ஆனந்தகுமார் மேலும் கூறியதாவது,

“மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. இதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்பட சம்பள உயர்வுக்காக குரல் கொடுத்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்தது காணி உரிமையையும் எமது மக்களுக்கு ஜனாதிபதி நிச்சயம் வழங்கி வைப்பார். அவரின் தலைமைத்துவத்தின் கீழ்தான் மலையகத்தில் மறுமலர்ச்சி ஏற்படவுள்ளது. இதனால்தான் மலையக மக்கள் அவரை ஆதரிக்குமாறு கோரிவருகின்றனர். இதற்கமையவே வேலுகுமார் எம்.பியும் ஜனாதிபதிக்கு நேசக்கரம் நீட்டியுள்ளார். அதனை வரவேற்கின்றேன்.

அமைச்சு பதவிகளுக்காகவும், ஏனைய சலுகைகளுக்காகவும் சஜித்துடன் ஒட்டிக் கொண்டிருக்கும்தமிழ்தலைவர்களும், மக்கள் பக்கம் நின்று ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க வேண்டும்.

ஏனெனில் ஜனாதிபதியின் வெற்றி உறுதியாகியுள்ளது. வங்குரோத்து அடைந்த நாட்டை குறுகிய காலப்பகுதிக்குள் ஜனாதிபதி மீட்டெடுத்தார்.

இலங்கையை வளமானதாக மாற்றுவதற்குரிய திட்டங்களையும் அவர் வகுத்துள்ளார். ஜனாதிபதியின் தலைமைத்துவம் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு கட்டாயம் நாட்டுக்கு தேவை. அந்த காலப்பகுதியே இலங்கைக்கு பொற்காலமாக அமையவுள்ளது.

ஜனாதிபதி ரணிலுக்கு பதிலாக ஏனைய வேட்பாளர்களை தேர்வு செய்தால் நாடு மீண்டும் இருண்ட யுகம் நோக்கியே செல்லும்.

எனவே, இது பரிசோதித்து பார்க்கும் நேரம் அல்ல, சொல்லில் அல்லாமல் செயலில் செய்துகாட்டிய தலைமைத்துவத்துடன் இணைந்து பயணிக்க வேண்டிய தருணம் என்றார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மை நிலையை வெளிப்படுத்துவோம்

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக மக்களின் எதிர்பார்த்துள்ளது போல உண்மை தன்மையை வெளிக் கொணர்வதற்கு தாம் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய மக்கள் கூட்டணியின் அனைவரும் தயாராக இருக்கிறோம். இதற்கான தெளிவான வேலை திட்டங்கள் என்னிடம் இருக்கின்றன. இது தொடர்பான விடயங்கள் பாராளுமன்றத்தில் கூட சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முறையான விசாரணைகள் வெளிப்படைத்தன்மையோடு இடம்பெற்றதா? என்பது குறித்தே இந்த நாட்டில் உள்ள கத்தோலிக்கர்களுக்கும், ஒட்டு மொத்த நாட்டு மக்களும் எதிர்பார்த்திருக்கின்றனர்.

இதன் உண்மைத்தன்மை வெளிப்படுத்தப்பட்டதா என்பது குறித்தும் சிக்கல்கள் காணப்படுகின்றன. எனவே இது தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டு, கா்தினல் உள்ளிட்ட கத்தோலிக்க பேரவைக்கு எங்கனமும் தெளிவுபடுத்துவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவ்வாறே, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான பின்னணி மற்றும் அதன் உண்மைத் தன்மை என்பனவற்றை எந்தவித பேதமும் இன்றி கண்டறிந்து, அதனுடன் தொடர்புடைய அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகபட்ச தண்டனையை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது வாக்குறுதியளித்தார்.

2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக ஆசிகளை பெற்றுக் கொள்ளும் முகமாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கொழும்பு ஆயர் இல்லத்திற்கு நேற்று (18) விஜயம் செய்தார்.

இங்கு, பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, அருட்திரு மெக்ஸ்வெல் சில்வா, அருட்திரு ஜே.டி. அந்தனி ஜயகொடி, அருட்திரு அன்டன் ரஞ்சித், அருட்திரு சிறில் காமினி மற்றும் அருட்திரு இந்திக ஜோய் ஆகியோரைச் சந்தித்து எதிர்க்கட்சித் தலைவர் ஆசிகளைப் பெற்றுக் கொண்டார்.

# சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் 150 கூட்டங்கள்


ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் நாடு முழுவதும் 150 அரசியல் கூட்டங்களை நடத்த ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளது.

அதில் 100 கூட்டங்களில் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளதாகவும், எஞ்சிய பிரதான கூட்டங்கள் அவருக்கு ஆதரவான குழுக்களின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தக் கூட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, சமகி ஜன பலவேகய, பொதுஜன ஐக்கிய முன்னணி, தேசிய காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான கூட்டணிகள் மற்றும் அமைப்புகளைச் சேர்ந்த பலர் பங்கேற்கவுள்ளனர். இதற்கு மேலதிகமாக ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் நாடளாவிய ரீதியில் பல சிறியளவிலான பொதுக்கூட்டங்கள், தோட்டங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# டெங்கு பரவல் தீவிரமாகிறது; சுற்றுச்சூழலை பாதுகாக்க அவசரமான கோரிக்கை

**சுகாதார அமைச்சு அவசர வேண்டுகோள்**




நாட்டில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 34 ஆயிரத்து 906 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 14,248 ஆகும்.

அதன்படி, கொழும்பு மாவட்டத்திலிருந்து 8,452 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். மேலும், இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 16 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதனால், பொதுமக்கள் அனைவரும் தங்களது சுற்றுச்சூழலைச் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்குமாறு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.


# தீர்மானத்தை மாற்றிய கிராம உத்தியோகத்தர்கள்

நேற்று (18) நள்ளிரவு முதல் தமது தொழிற்சங்க நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்துவதாக கிராம உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.கிராம உத்தியோகத்தர், தேர்தல் உத்தியோகத்தர் என்பதால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது அதிகபட்ச பங்களிப்பை வழங்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அதன் இணைத் தலைவர் நந்தன ரணசிங்க நேற்று (18) தெரிவித்தார்.

கிராம அலுவலர் சேவை யாப்பு மற்றும் கிராம அலுவலர் கொடுப்பனவுகளை தற்போதைய பொருளாதார நிலைமைக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வேண்டும் எனக் கோரி நாடு முழுவதிலும் உள்ள கிராம உத்தியோகத்தர்கள் கடந்த மே மாதம் 4ஆம் திகதி முதல் தொழிற்சங்க நடவடிக்கையை தொடங்கினர்.

எனினும் கிராம உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பினால் ஓகஸ்ட் 12ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை கறுப்புப் போராட்ட வாரத்தை ஆரம்பித்திருந்த நிலையில், அது இன்று நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளதாக அந்த கூட்டமைப்பின் இணைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மே 17ஆம் திகதி முதல் இதுவரை காலமும் கிராம உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்ட சட்டப்படி சேவை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையும் இன்று நள்ளிரவுடன் நிறைவடைவதாக கிராம உத்தியோகத்தர் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் இணைத் தலைவர் மேலும் தெரிவித்தார்.






## ஜப்பானிலிருந்து இந்தியா...

'உலகின் தெற்கு நாடுகளின் குரல்' மாநாட்டின் அரச தலைவர்கள் அமர்வில் நேற்று முன்தினம் (17) அநுராதபுரம் ஜனாதிபதி மாளிகையில் இருந்து இணையவழி மூலம் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

"நிலைபேறான எதிர்காலத்திற்கான வலுவூட்டப்பட்ட உலகின் தெற்கு நாடுகள்" என்ற தொனிப்பொருளின் கீழ் மூன்றாவது முறையாக நடைபெறும் இந்த மாநாடு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மற்றும் பல்வேறு நாடுகளின் அரச தலைவர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. உலகளாவிய தலைமைத்துவத்தில் மேற்கிற்கு இனிமேலும் ஆதிக்கம் செலுத்த முடியாத நிலையை அடைந்துள்ளதாகவும், இவ்வாறான நிலையில், உலகின் தெற்கு நாடுகளை வலுப்படுத்தும் இந்தியாவின் முயற்சிகளுக்கு இதன்போது ஜனாதிபதி பாராட்டு தெரிவித்தார்.

உலகின் தெற்கு நாடுகள் எதிர்நோக்கும்பல்வேறுசிக்கல்கள்தொடர்பில் பொதுவான ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு 'உலகின் தெற்கு நாடுகளின் குரல்' மாநாடு உதவும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்திய இலங்கை உறவு குறித்து இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி,

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான 'நோக்கு' பிரகடனம் இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று ஒத்துழைப்பை நினைவுபடுத்துவதுடன் எதிர்காலத்தில் நெருக்கமான உறவுகளுக்கு வழி வகுக்கும் என்றும் இது இறுதியில் பல்வேறு துறைகளின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான ஒருங்கிணைப்புக்கு வழிவகுக்கும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், இந்தியப் பிரதமர் மோடி மற்றும் இந்தியாவின் பெருந்தன்மையால் இலங்கை மக்கள் இரண்டு வருடங்களாக எதிர்கொண்ட சிரமங்களைக்குறைத்துவங்குரோத்து நிலையிலிருந்து மீள முடிந்ததை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, அதற்காக நன்றிகளைத் கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவிக்கையில்: 'உலகின் தெற்கு நாடுகளின் குரல்' தொடர்பான மூன்றாவது இணையவழி மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளமைக்கு நன்றி. இந்தத் தொடர் உச்சி மாநாடு எமது நோக்கங்கள் குறித்த புரிதல்கள் மற்றும் ஒவ்வொருக்கு இடையிலான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் வாய்ப்பு கிடைக்கும்.

மேலும் உலகின் தெற்கு நாடுகள் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளில் பொதுவான நிலைப்பாட்டை எட்ட உதவும். மேற்குலகம் தொடர்ந்தும் உலகத் தலைமைத்துவத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாத நிலைக்கு வந்துள்ளது. இப்போது பிரச்சினைக்குரிய பகுதியாகவும் மேற்குலகம் மாறியுள்ளது. . உக்ரெய்னும் காசாவும் அதற்கு முக்கியமான உதாரணமாகும். இந்தச் சூழலில், உலகளாவிய தெற்கு நாடுகளை வலுப்படுத்தும் இந்தியாவின் முயற்சிகளை நாம் பாராட்ட வேண்டும்.

இலங்கை தனது பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைவதற்கு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளை குறிப்பிடுகிறேன். உத்தியோக பூர்வ கடன் வழங்கிய நாடுகள், சீனா எக்ஸிம் வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கியுடனும் இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கான ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

இரண்டு வருடங்களாக இலங்கை மக்கள் எதிர்கொண்ட சிரமங்களை குறைத்து வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்தியாவின் பெருந்தன்மையே காரணம் என்பதை இத்தருணத்தில் குறிப்பிட வேண்டும்.

நமது இரு நாடுகளும் ஏற்றுக்கொண்ட 'நோக்கம்' என்ற அறிக்கையானது, 2000 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் நமது இரு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை நினைவுபடுத்தும் அதே வேளையில், எதிர்காலத்திலும் நெருங்கிய உறவுகளை பேணுவதற்கான வழியைத் திறந்துள்ளது. இதனால் பல துறைகளில் நமது இரு நாடுகளுக்கும் இடையே ஆழமான பிணைப்பு ஏற்படும்.

தற்போது விரிவான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒப்பந்தத்தை எட்டுவதற்கான இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளோம். மின்சாரம், போக்குவரத்து மற்றும் தரை மார்க்க இணைப்புகள் ஆரம்பிக்கப்படும். மேலும் திருகோணமலை துறைமுக அபிவிருத்தி மற்றும் ஏனைய இணக்கம் காணப்பட்ட திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தியுள்ளோம்.

இந்த திட்டங்கள் எமது அறிவையும் தொழில்நுட்பத்தையும் மேம்படுத்துவதற்கும் இலங்கையை டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி நகர்த்துவதற்கும் உதவும். அதற்காக இந்தியா வழங்கும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

வங்காள விரிகுடா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் தற்போது அபிவிருத்தியின் மையமாக மாறி வருகிறோம். எனவே, பிம்ஸ்டெக் (BIMSTEC) அமைப்பின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

BIMSTEC சங்கத்தின் உறுப்பினர் என்ற வகையில் இலங்கை, இந்தியாவுடன் நெருக்கமான பொருளாதார ஒருங்கிணைப்புடன், ஜப்பானில் இருந்து இந்தியாவிற்கு வரையில் பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன், பிராந்தியத்தின் விரிவான பொருளாதார கூட்டிணைவான (RCEP) உறுப்புரிமையை இலங்கையை பெற்றுக்கொள்ளவும் இலங்கை முன்வந்திருக்கிறது. வங்காள விரிகுடா பகுதி நமது பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்பதையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சி, நாகரீகங்களின் மோதல், வரலாற்றின் முடிவுகள் போன்ற கருத்துக்களால் உருவான மேற்கத்திய மேலாதிக்கத்தின் 1989இற்குப் பிந்தைய சகாப்தம் இப்போது முடிவுக்கு வருகிறது.

இந்த உச்சிமாநாடு மற்றும் இதற்கு நிகரான BRICS மற்றும் G20 குழுவின் விரிவாக்கம் என்பன உலகளாவிய தெற்கில் ஒரு பாரம்பரியத்தை விட்டுச்செல்லகக்கூடிய புதிய ஒழுங்குக்கு வழி வகுக்கும். சுதந்திரம் பெற்றதில் இருந்து ஆபிரிக்க ஆசிய நாடுகளை ஒன்றிணைக்க நடவடிக்கை எடுத்துவரும் நம் அனைவருக்கும் இடையே நெருக்கமான ஒற்றுமையை கொண்டு வருவதற்காக ஆற்றி வரும் பணிக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.'' என்று தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள்

(19.08.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:** முக்கியமான நண்பர்கள் இல்லாத காரணத்தால் சில செயல்கள் அரைகுறையாக பாதியிலேயே நிற்க நேரிடும்.

**ரிஷபம் :** சில செயல்களில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது. உத்தியோகத்தில் சிலருக்கு முக்கிய பொறுப்புக்கள் வந்து சேரும்.

**மிதுனம்:** எதிலும் கவனம் தேவை. இருந்த போதும் நீங்கள் முயற்சி செய்த செயல்கள் சிலவற்றில் வெற்றி கிடைக்கும்.

**கடகம்:** புதிய ஒப்பந்தங்களில் கவனம் தேவை. காரியங்கள் பலவற்றில் முன்னேற்றம் காண்பீர்கள். உத்தியோகத்தில் அலுவலகங்கள் சிலருக்கு புதிய பொறுப்புக்கள் கிடைக்கும்.

**சிம்மம்:** உத்தியோகத்தில் சக நண்பர்களிடம் உங்கள் மதிப்பு உயரும். அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அதன் மூலம் சில சலுகைகள் பெறுவீர்கள்.

**கன்னி:** உத்தியோகத்தில் சிலருக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். பிறகு செய்யலாமென்று தள்ளி வைத்த வேலையை உயரதிகாரிகளின் விருப்பப்படி உடனே செய்ய வேண்டியதிருக்கும்.

**துலாம்:** முக்கியமான செயல்களில் அதிக முயற்சி செய்து வெற்றிகளை அடைவீர்கள். தளர்வடையும் செயல்களில் தகுந்த நண்பர்களின் உதவியோடு முன் நின்று முன்னேறுவீர்கள்.

**விருச்சிகம்:** எடுத்த செயல்களில் வெற்றி பெற சலிக்காமல் முயற்சி மேற்கொள்வீர்கள். சில காரியங்கள் உங்கள் எண்ணபடி நடைபெறாமல் போகலாம்.

**தனுசு:** அவசியமான செயல்களில் முயற்சிகளை அதிகமாக்குவீர்கள். சிலவற்றில் முன்னேற்றமான பலன்கள் கிடைத்தாலும் சில காரியங்களில் தளர்வு ஏற்படக்கூடும்.

**மகரம்:** தீவிரமான முயற்சிகளுடன் சில செயல்களில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். நினைத்தபடி வேலைகளை செய்ய முடியாமல் தடங்கல்கள் ஏற்படலாம்.

**கும்பம் :** செய்யும் செயல்களில் தீவிரம் முயற்சியோடு செயல்பட்டு வெற்றி அடைவீர்கள். காரியங்களில் தடை தாமதங்கள் ஏற்பட்டாலும் அவற்றை முறியடித்து முன்னேறுவீர்கள்.

**மீனம்:** உங்கள் முயற்சிகள் பலவற்றில் வெற்றிகரமான போக்கு காணப்படும். தளர்வடைந்த காரியங்களில் தீவிர முயற்சியுடன் செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள்.

## பொய் பிரசாரங்களுக்கு...

சமூகத்தில் தவறாக சித்தரிக்கப்படுமாயின் அதனைத் திருத்த வேண்டிய கடமையும் பொறுப்பும் அமைச்சரவைப் பேச்சாளர் என்ற வகையில் எனக்கு உண்டு.

அமைச்சரவைப் பத்திரங்கள் இரகசியமானவை. அவை வெளியே கொண்டுசெல்லப்படுவதில்லை. அவற்றின் பிரதிகள் அமைச்சின் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். நான் அமைச்சரவை பேச்சாளராக பணியாற்றுகிறேன். அந்தச் செயற்பாடுகளில் ஊடகவியலாளர்களும் பொறுப்புடன் செயற்பட்டனர். என்னால் தெரிவிக்கப்பட்ட செய்தி அரசியலமைப்பின்படி சிங்கள மற்றும் தமிழ் ஊடகங்களில் வெளிவருகின்றன. அவை ஊடக நிறுவனங்களுக்கும் அனுப்பப்படுகிறன. அவை கலாநிதி பந்துல குணவர்தனவின் அறிக்கைகள் அல்ல. அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவுகளையே நான் அறிவிப்பேன். நீண்டகாலமாக அடிப்படைச் சம்பளம் மாற்றியமைக்கப்படாமையால், அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்பட்டு, 25,000 ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக மூன்று வருடங்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்பட யோசனை முன்வைக்கப்பட்டது.

இந்த முடிவுகளை நான் தெரிவித்த பிறகு, ஊடக நிறுவனங்கள் அதில் ஒரு பகுதியை மட்டுமே சமுகமயமாக்கியுள்ளன. அங்கு பலர் அடிப்படை சம்பளம் பற்றி குறிப்பிடாமல் ரூ.25,000 உயர்வு பற்றி மட்டுமே குறிப்பிட்டுள்ளனர்.

ஆட்சி செய்வதும் அரசியல் செய்வதும் இரண்டு. தற்போது நிதி அமைச்சு வரவு செலவு திட்டத்தை தயாரித்து வருகிறது. அதில் உள்ளடக்குவதற்கு அமைச்சரவை அறிவிப்பு சரியாக இருக்க வேண்டும். அனைத்து அரச ஊழியர்களுக்கும் மூன்று வருடங்களுக்கு 25,000 ரூபா கொடுப்பனவு திருத்தம் இன்றி வழங்கப்படும்.

இரண்டாவதாக, அடிப்படை சம்பளம் திருத்தப்படாவிட்டால், நூற்றுக்கு 255.35 சதவீதம் அதிகரிக்கும். மிகக் குறைந்த வருமானம் பெறுபவர்கள் குறைந்தபட்சம் மாதம் 55,000 ரூபாய் அல்லது அதற்கு மேல் பெறுவார்கள்.

சர்வதேச நாணய நிதியம் 2027 ஆம் ஆண்டு வரை வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை நிதி ஒதுக்கீட்டின் அளவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்கான ஒப்பந்த ஆவணங்கள் கையெழுத்தாகியுள்ளன.

## பிரதமர் தலைமையில்...

மல்வத்து மகாநாயக்கர் சங்கைக்குரிய திப்பட்டுவாவே ஶ்ரீ சித்தார்த்த சுமங்கல மகாநாயக்க தேரரை நேற்று (18) சந்தித்து நல்லாசி பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பிரதமர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அரசாங்கத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு ஆதரவு வழங்கிய பெரும்பான்மையான ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக மேற்கொண்ட தீர்மானத்தை நிராகரித்து ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளனர்.

அந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுன போன்ற பல கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இரண்டு வருடங்களாக மிகவும் சிரமப்பட்டு கட்டியெழுப்பப்பட்ட நாடு தற்போது சரியான பாதையில் முன்னேற்றம் கண்டுவருகிறது. இந்த வெற்றியை மேலும் பாதுகாப்பதற்கும் முன்னெடுப்பதற்கும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுகின்றோம். இப்போதே உள்ளாட்சி முதல் பாராளுமன்றம் வரை அனைத்து எம்பிக்களும் கைகோர்த்து வருகின்றனர்.

இதனால் அடுத்த தேர்தலில் வேட்புமனு கிடைக்காமல் போய் விடுமோ என்று யாரும் பயப்பட வேண்டாம்.

அவர்களுக்கு இவ்வாறான அச்சுறுத்தலுக்கு நாம் இடமளிக்க மாட்டோம்.

புதிய அரசியல் சக்தியை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை நாங்கள் புரிந்து கொண்டுள்ளோம். அதற்காக, எனது முழு ஒத்துழைப்பையும் ஆசிகளையும் வழங்குகிறேன் என்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தனவும் கலந்துகொண்டார்.

## ஶ்ரீ தலதா மாளிகை...

(19) இரவு இடம்பெறவுள்ளது. மாலை 6.57 மணிக்கு ஶ்ரீ தலதா மாளிகையில் ஆரம்பமாகும் வீதி உலா தலதா வீதி, யட்டிநுவர வீதி, கந்த வீதி வழியாக ராஜ வீதியின் ஊடாக ஶ்ரீ தலதா மாளிகையில் நிறைவடையும்.

ரந்தோலி பெரஹராவின் வீதி உலாவையடுத்து மறுநாள் அதிகாலை கெட்டம்பேயில் தீர்த்தோற்சவ நிகழ்வு இடம்பெறும். பின்னர் 20ஆம் திகதி பிற்பகல் கண்டி செல்வ விநாயகர் ஆலய முன்றலில் பெரஹரா ஆரம்பமாகவுள்ளது.

பிற்பகல் ஆரம்பமாகும் வீதி உலா டி.எஸ்.சேனநாயக்க வீதி வழியாகச் சென்று ஶ்ரீ தலதா மாளிகையை சென்றடையும்.

## 500 ஐக் கடந்துள்ள...

கடந்த மாதம் 31 ஆம் திகதி முதல் நேற்று வரை இந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான 503 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வன்முறைச் செயல்கள் தொடர்பாக ஒரு முறைப்பாடும், ஏனைய முறைப்பாடுகள் 15 கிடைக்கப்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## "பார் பர்மிட்" எனக்கிருந்தால்...

இருந்து விலகுவாரா? என பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜயாசிறி ஜயசேகரவுக்கு சவால் விடுத்துள்ளார்.

எனது பெயரில் நாட்டுக்கு கல்வி வழங்கும் பல நிலையங்கள் இருக்கின்றதென்பதையும் தயாசிறிக்கு சொல்லி வைக்கின்றேன். சேறு பூசுவதால் எனது பயணத்தை தடுத்துவிட முடியாது. எனது தெரிவே இந்நாட்டு மக்களின் இம்முறை ஜனாதிபதி தேர்தலின் தெரிவாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எவ்வித அடிப்படையும் இல்லாத குற்றச்சாட்டை என் மீது வைத்துள்ளார். அன்று நாடு நன்றாக இருந்த போது, நல்லாட்சி சரிவராது என்று கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி கதிரையில் அமர்த்திய பங்காளி இவர். இன்று வங்குரோத்தான நாட்டை மீண்டும் கட்டி எழுப்பி, வளர்ச்சி பாதையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழிநடத்தி வருகின்றார்.

மீண்டும் வந்து இவர் சரிவராது என்று இன்னொரு கோட்டாபயவை ஜனாதிபதியாக்க தயாசிறி துள்ளிக் குதிக்கிறார். ஆனால் நாட்டிற்கு சரியான தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் என்பதே உண்மையாகும். அதற்கு அமைய துணிச்சலாக முன்வந்து அவரின் வெற்றிக்கு எனது ஒத்துழைப்பை வழங்கியுள்ளேன்.

## நீர் நிலைகளுக்கு...

திணைக்களம் தெரிவித்துள்ளது. இதற்கமைவாக நாளை மறுதினம் 21ஆம் திகதிக்கு பின்னர் பருவ மழை நிலைமை மேலும் குறையும் என எதிர்பார்க்கலாம் என திணைக்களத்தின் பணிப்பாளர் மலித் பெர்னாண்டோ தெரிவித்தார். இன்றும், நாளையும் (20) நாட்டின் தென்மேற்குப் பகுதியில் இடைக்கிடை மழை பெய்யக் கூடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பல நதிகளின் நீர் மட்டம் அதிகரிப்பு

நாட்டின் மேற்குப் பகுதியில் ,சப்ரகமுவ மற்றும் தென் மாகாணத்தில் காலி மாத்தறை மாவட்டங்களில் கடந்த இரண்டு தினங்களில், சில பகுதிகளில் பெய்த கடும் மழை காரணமாக இந்த பகுதிகளில் உள்ள ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. களு கங்கையின் கிளை நதியான குடா கங்கையின் நீர்மட்டம் தற்போது அதிகரித்துள்ளதுடன் இந்தப்பகுதியில் வெள்ள அனர்த்த நிலை ஏற்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களத்தின் நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் எஸ்.பி.சி சுகீஸ்வர தெரிவித்தார்.

இதற்கமைவாக , புலத்சிங்கள, மதுரவல, பரிந்தனுவர முதலான , தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்த வெள்ள அனர்த்த நிலை நாளை (20) காணப்படும் என்றும் அவர் கூறினார்.

குக்குலே கங்கை பகுதியிலுள்ள மக்களும் அவதானமாக செயல்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அத்தனகல பள்ளத்தாக்கின் மேல் பகுதிகளிலும் கணிசமான மழை பெய்துள்ளது.

இதனால், அதன் கிளை நதிகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. அத்தனகல்லை, கம்பஹா, ஜாஎல, வத்தளை ஆகிய தாழ்நிலப் பகுதிகளிலுள்ள மக்கள் இது தொடர்பில் அவதானத்துடன் செயல்பட வேண்டும். ஜிங் கங்கையின் தாழ்வான பகுதிகளில் நீர்மட்டமும் அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களத்தின் நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் எஸ்.பி.சி சுகீஸ்வர மேலும் தெரிவித்தார்.

## தேர்தல் விஞ்ஞாபனம்...

கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

கட்சித்தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தில் கட்சியின் செயலாளர் பா. சத்தியலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன் மற்றும் இரா.சாணக்கியன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## விவசாயிகளுக்கு இலவச...

உர இருப்பு கிடைத்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், எதிர்வரும் இரண்டு பயிர்ச்செய்கைக் காலங்களுக்குத் தேவையான பசளை உரங்கள் இந்தப் பருவத்திலிருந்து விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எமது ஆட்சியில் மத...

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் நடத்தப்படும் முதலாவது பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் தங்காலையில் ஆரம்பமாகியது.

இதன்போது உரையாற்றுகையிலேயே அநுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "நாடு என்ற ரீதியில் முன்னோக்கி செல்வதற்கு தேசிய மட்டத்திலான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். தேசிய மக்கள் சக்தி தொடர்பாக இன்று பலர் வீண் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

நாட்டில் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் பலர் அரசியல் பதவிகள் மற்றும் தனிப்பட்ட லாபம் கருதி கட்சித்தாவல்களில் ஈடுபட்டுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவாக இருந்தாலும் அல்லது வேறு எந்த வேட்பாளர்களாக இருந்தாலும் எத்தகையை கூட்டணிகள் அமைத்தாலும் நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது. பொது மக்கள் இன்று தேசிய மக்கள் சக்தியுடன் உள்ளனர் இவ்வாறு அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

## பெரும்பான்மை, சிறுபான்மை...

கள். எம் மீது நம்பிக்கை வைத்து எமக்கு வாக்களியுங்கள் என சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர வடக்கு மக்களிடம் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை (17) இடம்பெற்ற சர்வஜன சக்தியின் முதலாவது கன்னி கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## தமிழ் பொது வேட்பாளரின்...

இதில் தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், சிவில் சமூக பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டு மைதானத்தில் நேற்று பிற்பகல் 3 மணிக்கு தமிழ் பொது வேட்பாளர் அறிமுக பொதுக் கூட்டம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து, வடக்கு, கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் இரண்டு கூட்டங்களும் மாவட்டங்களுக்கு ஒரு பெரும் பொதுக்கூட்டமும் பொது வேட்பாளர் கலந்துகொள்ளும் கூட்டமாக இடம்பெற திட்டமிடப்பட்டுள்ளது.

## வாக்குச்சீட்டு அச்சிடும்...

அரச அச்சகத்துக்கு வழங்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஶ்ரீ ரத்நாயக்க, தேர்தலுக்காக மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடு போதுமானதாக இருக்கும் என தெரிவித்துள்ளார்.

கடந்த முறையை விட தற்போது வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதற்கமைய வாக்குச்சீட்டின் நீளம் 27 அங்குலம் வரை அதிகரித்துள்ளதுடன் ஒரே பக்கத்தில் வாக்குச்சீட்டை அச்சிடவும் முடியும். எனவே, வாக்குச்சீட்டுக்கான செலவு மதிப்பிடப்பட்ட செலவினத்தை விடவும் அதிகரிக்கும். எனினும் மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டிற்குள் குறித்த அச்சிடல் பணிகளை முன்னெடுக்க முடியும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஶ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக நாட்டுக்கு வருகை தந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வதேச கண்காணிப்புக் குழுக்கள் தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி தேர்தலில் இ.தொ.கா...

தொண்டமான், பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மற்றும் தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோர் கூட்டாக அறிவித்துள்ளனர்.

நேற்று (18) கொட்டகலையில் தேசிய சபை கூட்டம் முடிவடைந்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

அவர்கள் கூறியவை வருமாறு,

# ஜீவன் தொண்டமான் ; நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து ஜனாதிபதி மீட்டுள்ளார். கடந்த இரு வருடங்களில் பல வேலைத்திட்டங்களை அவர் செயல்படுத்தியுள்ளார். அதுமட்டுமல்ல மலையக மக்களின் வாழ்வாதார மேம்பாடு, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் நடவடிக்கை எடுத்துள்ளார். சம்பள பிரச்சினை தொடர்பிலும் அதிக அக்கறையுடன் செயற்பட்டார். தேசிய சபையில் எடுக்கப்பட்ட முடிவு ஜனாதிபதிக்கு தொலைபேசி வாயிலாக அறிவிக்கப்பட்டது. மலையக மக்கள் தனது பக்கம் நிற்பது பலம் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

# செந்தில் தொண்டமான்; ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஜனநாயக முறைப்படி கலந்துரையாடல் இடம்பெற்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் முடிவை பெரும்பாலான உறுப்பினர்கள் தெரியப்படுத்தினர். கட்சி தலைமை என்ற அடிப்படையில் அதனை நாம் ஏற்றுள்ளோம். தேசிய சபைக்கூட்டத்தில் பங்கேற்றவர்கள் கோரிக்கைகளையும் முன்வைத்தனர். இவை சம்பந்தமாக ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படும்.

## இலங்கை வருகிறார்...

முதல் 31ஆம் திகதி வரை இந்தியா, இலங்கை மற்றும் மாலத்தீவுகளுக்கு அவர் பயணம் செய்யவுள்ளார்.

அவரது பயணத்தின் போது, இயற்கை மற்றும் கடல் பாதுகாப்பு, பிளாஸ்டிக் மற்றும் காற்று மாசுபாடு, காலநிலை நெருக்கடி உள்ளிட்ட விடயங்கள் குறித்து அவர் விவாதிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று 19 முதல் 21 வரை இலங்கையில் தங்கியிருக்கும் அவர், அரசாங்க உயர் அதிகாரிகள் உள்ளிட்டவர்களைச் சந்திப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அமெரிக்க ஆதரவளிக்கும் வனவிலங்கு பாதுகாப்புத் திட்டங்களைப் பார்வையிடும் அவர், காலநிலை மாற்றம் போன்ற முன்னுரிமைப் பகுதிகளில் அமெரிக்க நிபுணர்களுடன் இலங்கையர்களை இணைப்பதற்கான வாய்ப்புகளை ஆராய்வார்.

இந்தியாவில் நாளை மறுதினம் 21 முதல் 28 வரை தங்கியிருக்கும் அவர், அறிவியல் ஆராய்ச்சி, விண்வெளி ஆய்வு, வனவிலங்கு கடத்தலை எதிர்த்துப் போராடுதல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து பேசுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மானுடவியல்



177

பிள்ளையார் அவர்களை நோக்கி, "மங்கையர்க் கரசியாரும் குலச்சிறையாரும் க்ஷேமமாய் இருக்கின்றார்களா" என்று வினாவியருள; அவர்கள் 'ஆம்' என்று சொல்லி, பின், 'ஏழுலகமும் உய்யும்படி திருவவதாரஞ்செய்தருளிய பரமகிருபாலுவே! சைவசமயாசாரிய மூர்த்தியே! பாண்டியனும் பாண்டியநாட்டாரும் சமணர்களுடைய துர்ப்போதனையினாலே விபூதி சாதனங்களை விட்டு ஆருகதமதத்திலே பிரவேசித்தமையால், மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை நாயனாரும் மிகக் கவலை கொண்டிருந்தார்கள். பின்பு தேவரீருடைய மகிமையைக் கேள்வியுற்று, அந்தச் சமாசாரத்தைத் தேவரீருக்கு விண்ணப்பஞ் செய்யும் பொருட்டு, அடியேங்களை அனுப்பினர்' என்று பிரார்த்தித்தார்கள். அது கேட்ட சிவனடியார்கள் சமஸ்தரும் பிள்ளையாரை நமஸ்கரித்து எழுந்து நின்று, "சுவாமி! தேவரீர் பாண்டிநாட்டுக்கு எழுந்தருளி, நமது கடவுளாகிய பரமசிவனுடைய திருவடிகளை அடையாத அதிபாதகர்களாகிய சமணர்களை வாதிலே வென்று, வேதசிவாகமங்களால் உணர்த்தப்படுஞ் சைவ சமயத்தை ஸ்தாபனம் பண்ணி, பாண்டியனையும் விபூதியிடுவித்து, உய்விக்கும் பொருட்டுத் திருவுளங்கொண்டருள வேண்டும்" என்றார்கள். பிள்ளையார். அவர்களுக்கு அருள்புரிந்து, அப்பமூர்த்தியோடு திருக்கோயிலிற் சென்று, சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு, திருக்கோபுரத்துள் இருந்து, பாண்டிமா தேவியாரும் குலச்சிறைநாயனாரும் சொல்லி அனுப்பிய வார்த்தையை அவருக்குச் சொல்லி, பாண்டிநாட்டுக்கு எழுந்தருளுதற்குத் துணிந்தருளினார்.

அப்பொழுது அப்பமூர்த்தி "தேவரீர் சிறுபிள்ளையாய் இருக்கிறீர். அச்சமணர்களுடைய வஞ்சனைக்கோ ஓரெல்லையில்லை. தேவரீருக்கு இப்பொழுது கிரகங்கள் வலியில, ஆதலால் தேவரீர் அவ்விடத்திற்கு எழுந்தருளுதற்கு உடன்படுவது ஒண்ணாது" என்று விண்ணப்பஞ்செய்ய; பிள்ளையார் "பரமசிவன் நம்முடைய சிந்தையை கோயில்கொண்டு வீற்றிருத்தலினால் நமக்குத் தீங்கு வராது" என்று சொல்லி பரமசிவனுடைய திருவடிகளைத் துதித்து, "வேயுறுதோளி" என்னுங் கோளறு பதிகத்தைப் பாடியருளினார். அந்தத் திருப்பதிகத்தைக் கேட்டதன் பின், அப்பமூர்த்தியும், அதற்கு உடன்பட்டு தாமும் அவர்முன்னே எழுந்தருள அமைந்தபொழுது; பிள்ளையார் "அப்பரே! நீர் இந்தச் சோழ மண்டலத்திலே தானே எழுந்தருளியிரும்" என்று சொல்லி, கைகுவித்து வணங்கித் தடுக்க; அப்பமூர்த்தியும் வணங்கி, அதற்கு ஒருவாறு அருமையாக உடன்பட்டார்.



**(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# சித்தாண்டி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய மஹோற்சவப் பெருவிழா

வரலாற்றுப் புகழ்மிக்க சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவமானது இன்று 19 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறவிருக்கின்றது. சித்தாண்டி எனும் கிராமம் மட்டக்களப்பு நகரின் பதிமூன்று கல் தொலைவில் மேற்குப்பக்கமாக நெல்வயல்களும் ஏரிகளும் சூழ்ந்த இயற்கைச் செழிப்போடு அமையப் பெற்றுள்ளது.



சித்தாண்டி ஸ்ரீ சித்திரவேலாயத சுவாமி கோயிலுக்கு கர்ண பரம்பரைக் கதைகளும் வாய்மொழிக் கதைகளும் உண்டு. இந்த வகையில் பண்டிதர் வீ. சி. கந்தையா 'செகண்டி' முனிவருடைய 'வேலை' சிறு குடிசையில் வைத்துப் பூசித்தாரென்றும் இதை அறிந்த மக்கள் இங்கு சென்று வழிபட்டு முனிவரால் இஷ்டசித்திகளைப் பெற்றனர். என்று குறிப்பிட்டுள்ளார். இம் முனிவர் பல அற்புத சித்திகளைச் செய்தமையால் சித்தர் என்ற பெயரும் நீறு பூத்த மேனியுடனும் உருத்திராக்க கோலத்துடனும் விளங்கியமையினால் ' ஆண்டி' என்ற பெயரும் சேர்ந்து (சித்து, ஆண்டி ) சித்தாண்டி என காரண இடு குறிப்பெயரால் அமைந்ததாகச் சொல்லப்படுகின்றது.

இக்கோயில் பற்றிய வரலாற்றினை 4 வகையான மரபு வழிக் கதைகள் உண்டு என கலாநிதி வ. குணபாலசிங்கம் ஈழத்து இந்துக் கோயில்கள் எனும் நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

ஆண்டி ஒருவன் பல காதவழியைக் கடந்து காட்டு மார்க்கமாகச் சென்ற போது அவனை மத யானை ஒன்று வழிமறித்தது அவ்வேளையில் ஆண்டி முருகனை நினைத்து அபயக்குரல் கொடுத்தான் அக் குரலைக் கேட்டதும் ஆண்டி முன்தோன்றி மத யானையைக் கொன்று சித்திர வேலாயுத சுவாமி காத்ததினால் வேலை வைத்து வழிபட்டதாக மரபு வழிக் கதையாகவுள்ளமை.

ஆண்டி வாழ்ந்த இடத்தில் வேல் வைத்து வணங்கிய பகுதியைச் சூழ பல இடங்களில் இருந்து வந்த மக்கள் குடியிருப்புக்கள் அமைத்தனர். அவர்களுக்கு தலைவனாக வேட வண்ணியன் பேரில்லாவெளியில் இருந்தும் ஆட்சி செய்து வந்தான். அவனது ஆட்சியின் கீழ் இக் கோயில் இருந்தமை பற்றியும் இக் கோயிலுடன் தொடர்புடைய மரபுவழிக் கதைகளில் போர்த்துக்கேயர் தொடர்புபடுத்தப்பட்டுள்ளார்கள்.

சிகண்டி முனிவர் அத்தி மரம் ஒன்றின் கீழ் தவம் புரிந்தார். அங்கிருந்த வன வேடர்கள் அவரைக் கண்டு பணிந்து தொழுதனர். இவை பற்றியும் மரபு வழிக் கதைகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

இத்தகைய சிறப்புமிக்க ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச் சிறப்புக்களோடு அமைந்துள்ளது என்பதற்கு தென்கிழக்கில் அமைந்துள்ள தீர்த்தக்கேணி சான்று பகிர்கின்றது. இக்கோயில் வருடா வருடம் ஆவணி பிரதமையில் கொடியேறி பௌர்ணமித் தினத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெற்று முடிவடைகின்றது. திருவிழாக்கள் 15ம் குடி வாரிசாக நடக்கும் எனவும் அக்குடிகளின் தொகை ஏழாக இருப்பினும் அவற்றுள் மூன்று குடிகளே முக்கியம் என்பது ' பட்டயம் ' ஒன்றால் தெளிவாக்கப்படுகின்றது. இம் மூன்று குடிகளும் வன்னிமைக் குடி தலைமை வண்ணக்கரை வன்னியனார் என்றும் சொல்வர் மற்றைய இரு குடிகளும் புதூர்க்குடி, அத்தியா குடி என்றும் சொல்லப்படுகின்றன.

கோயில் ஆதனங்கள் நெற்காணி மூந்நூறு (300) அளவில் கொண்டதாக சொல்லப்படுகின்றது. இது பண்டைய மன்னர்களாலும் பிற்காலத்து புரவலர்களாலும் மானியமாக வழங்கப்பட்டது. இதை விட குருக்கள் பட்டி என்ற வயல் சுமார் பத்து (10) ஏக்கர் அளவுடையதாகவுள்ளது.

பூசகர் பரம்பரை சைவக் குருக்களான குருநாத வம்சத்தார் என்பவர்களிடமிருந்து இவர்கள் வீர சைவக் குருமாரே என்று அறியக் கிடைக்கின்றது. இக் குடியார் குறைபாடு இன்றிக் கோயிற் பூசையைச் செய்து வந்தமை தெரிகின்றது. இப்பரம்பரையில் பின்னர் குறைவு ஏற்படுதல் காரணமாக 1975 ஆம் ஆண்டு முதல் ' பிராமணரை' அழைத்து பூசை நடத்தப்பட்டு வருகின்றது.

கோயில் பற்றிய தல புராண நூலொன்று ஆரப்பற்றை அழகேச முதலி என்பவரால் சித்தாண்டித் தல புராணம் என்றும் மகுடமிட்டு பாடப்பட்டுள்ளது. இதை விட தனிப் பிராத்தனைப் பாடல்கள் திருவாளர் பிள்ளையான் சிவலிங்கம் திருவாளர் பனிக்கன் மயில்வாகனம் என்போர் இயற்றியுள்ளார்கள். பட்டயம் என்று வழங்கப்படும் தலைப்பற்று ஓலையிலான ஏடு ஒன்றில் இக் கோயிலின் பண்டைய வரலாற்றுக் குறிப்புக்கள், மானியங்கள் நடைமுறைகள் என்பன உள்ளன. இவை ஆலயத்தின் முக்கியமான சொத்தாக விளங்குவதுடன் வரலாற்று ஆவணமாகவும் மிளிர்கின்றது.

கலாநிதி
**நாராயணபிள்ளை–நாகேந்திரன்**





## முன்னேஸ்வரம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வரலெட்சுமி விரத பூஜை



இந்துக்களின் மிக முக்கியமான பூஜைகளில் ஒன்று வரலெட்சுமி விரத பூஜையாகும். முன்னேஸ்வரம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் வரலெட்சுமி விரத பூஜை வெள்ளிக்கிழமை(16) மிகவும் பக்தி வரவசத்துடன் நடைபெற்றது. இதன்போது, ஆலய குருக்களினால் பக்தர்களுக்கு காப்பு நூல் கட்டுதல் மற்றும்,விளக்குப் பூஜையும் நடைபெற்றது. இதில் பல பக்தர்கள் கலந்து கொண்டார்கள். *(உடப்பு குறூப் நிருபர்)*

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 99



மெல்லிய, வெள்ளை துணியில் சாயம் ஏறும் அளவிற்கு கடினமான அழுக்கு துணியில் ஏறுவதில்லை. அதே போல் பலவீனமானவன் பாதகமான சூழ்நிலையை கூட தாங்கிக்கொள்ளும்மனவலிமை இன்மையில் கவலைப்படுகிறான் அல்லது துன்பப்படுகிறான்.

உலகத்தில் வெற்றி, அழகு, சுகம், அமைதி பெற விரும்புவன் தனக்கு எதிரான பாதகமான சூழ்நிலையினை. சரியான கண்ணோட்டத்துடன் நோக்கி எதிர் கொண்டு, தமக்கு சாதகமான சூழ்நிலையாக மாற்றிக் கொள்ள முடியும். அதற்கு பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் உலகின் அனைத்து பொருட்களும். வாழ்வில் தான் சந்திக்கும் அனைத்து சூழ்நிலைகளையும் கண்டு கலங்கி பயந்து சுகத்தையும் அமைதியையும் இழந்துவிடுவான்.

உணர்வுகளை செயல் வடிவமாக மாற்றினால் தான் அந்த உணர்வுகள் நன்கு வளரும். மனதளவில் உதவி செய்திட நினைத்தால் மட்டும் போதாது. மனதில் நினைத்தப்படி தேவைப் படுவோருக்கு தக்க உதவி செய்யும் போது தான் அது சேவை என்ற பெயர் கொள்ளும். நோய்ப்பட்ட ஒருவனுக்கு சேவை செய்ய நினைப்பவர், அந்த நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டும். மருந்து மாத்திரைகளை வாங்கி கொண்டு வந்து தர வேண்டும். தேவைப்பட்டால் நோயாளிக்கு மருந்து ஊட்டவும் செய்ய வேண்டும். இவ்வளவும் செயல் வடிவம் பெறும் போது தான் அது சேவையாகக் கருதப்படும். இவ்வித சேவையால் மட்டுமே நோயாளிக்கும் சேவை செய்தவருக்கும் நன்மை ஏற்படும்.

பசித்தவனுக்கு உணவு. நிர்வாணமாய் நிற்பவனுக்கு ஆடை, மூடனுக்கு கல்வி, முடவனுக்கு கைத்தடி, நோயாளிக்கு மருத்து கொடுக்க வேண்டும் என நினைத்தால் மட்டும் போதாது. நினைத்தப்படி கொடுத்தால் தான் சேவை எனப்படும். உணர்வு மட்டும் ஒருவனை இன்புறச் செய்யாது.உதவும் போது தான் அனைவருக்கும் இன்பம் பிறக்கும்.

பிறர் நலன், பொது நலன் கருதி எந்தளவு நாம் சுயநலத்தை தியாகம் செய்கிறோமோ அப்போது நாம் தெய்வத் நன்மையை அடைகிறோம். அதிகாரத்தை செலுத்தி பிறரை அடிமைப் படுத்தாமல், பதவி மூலம் அனைவருக்கும் உதவி செய்தல் தெய்வ தன்மையாக கருதப்படும்.

# அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

**20200) இறைவனைப் பூஜிப்பதற்கு எந்த எந்தப் பூக்களைப் பயன்படுத்தக்கூடாது?**

வாசனை இல்லாத பூக்களையும் மகரந்தமில்லாத பூக்களையும் பூஜைக்கு உபயோகிக்கும் வழக்கமில்லை.

**20201) எந்த எந்த நேரங்களில் கோயிலுக்குப் போகக்கூடாது?**

கோயிலில் சந்நிதி திறந்திருக்கும் நேரங்கள் அனைத்தும் கோயிலுக்குப் போவதற்கு உரிய நேரங்கள்தான்.

**20202) பூஜையின்போது மணி அடிக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்?**

நாத தத்துவத்தை நினைவுபடுத்தும் பொருட்டு பூஜையின்போது மணி அடிக்கப்படுகிறது. இது முதலாவது காரணம்.

உலகியல் வேலைகளில் மூழ்கியிருக்கும் மக்கள் மணியோசையைக் கேட்டுத் தெய்வ சிந்தனையில் ஈடுபட வேண்டும். இது இரண்டாவது காரணம்.

**20203) முக்கியமாகக் கோயில்களில், பல விதமான தீபங்களை சுவாமிக்கு ஆராதனையின் போது காட்டுகிறார்கள். அதன் கருத்து என்ன?**

தீபாராதனையில் வரிசையாக அலங்கார தீபம், ஐந்து தீபம், மூன்று தீபம், ஒரு தீபம், முடிவில் கர்ப்பூர தீபம் என்று தீபங்களைக் காட்டும் வழக்கம் இருந்துவருகிறது. பலவாகக் காணும் உலகம், ஐம்பூதங்களில் ஒடுங்கி, அது முக்குணங்களில் ஒதுங்கி, அதுவும் ஒன்றுபட்டு, முடிவில் திரியின் கரியான அகங்காரமும் அழிந்து, கர்ப்பூரம் போல் நிர்க்குணமான பரம்பொருளில் மறைகிறது என்பது கருத்து.

**20204) திருவிளக்கிலுள்ள சுடரை நாம் குளிரச் செய்யலாமா அல்லது தானாக குளிரவேண்டுமா?**

திருவிளக்குச் சுடரைப் பூவில் பாலைத் தொட்டு நாம் குளிரச் செய்யவேண்டும். அரிசியை விளக்கில் எண்ணெய் இருக்கும் எந்தப் பகுதியிலாவது முதலில் வைத்துவிட்டு, பிறகு பூவினால் சுடரைக் குளிரச் செய்யும் வழக்கமும் இருக்கிறது. வேங்கடாசலபதி பூஜையின்போது நெய் விளக்கு ஏற்றப்படுகிறது. அப்போது பூஜை முடிந்ததும் நெய் தீர்ந்து தானாகவே சுடரைக் குளிரச் செய்வதுண்டு. இவ்விதம் தானாகச் சுடரைக் குளிரச் செய்வதை, `சுவாமி மலை ஏறுகிறார்' என்கிறார்கள்.

பூஜைக்குப் பயன்படுத்திய பூவினாலும் (நிர்மால்யம்) சுடரைக் குளிரச் செய்யலாம். குளிரச் செய்யப்பெற்ற தீபங்கள் தங்களுக்குள், `எனக்குப் பூ கொடுத்தார்கள், உனக்கு என்ன கொடுத்தார்கள்?' என்று, ஒன்றை ஒன்று விசாரித்துக்கொள்கின்றன என்று ஒரு கதை சொல்வார்கள்.

இவையெல்லாம் திருவிளக்குச் சுடரை வாயினால் ஊதி அணைக்கக்கூடாது அல்லது வெறுங்கையினால் அணைப்பது கூடாது என்ற கருத்தை மக்கள் மனதில் பதியச் செய்வதற்காக எழுந்த கதை என்று நாம் கொள்ளலாம்.

**20205) கோயிலுக்குச் சென்றால், மூன்று தடவை பிரதட்சணம் வரவேண்டும்' என்று சிலர் சொல்கிறார்கள். அவ்விதம் சொல்வதற்கு என்ன காரணம்?**

கோயிலுக்குச் செல்லும் நாம் சொல், செயல், சிந்தனை மூன்றினாலும் இறைவனிடம் நம்மை ஒப்படைக்க வேண்டும். இந்தக் கருத்தில் அமைந்த ஒரு வழக்கத்தையொட்டி, நாம் ஆலய வழிபாட்டில் மூன்று தடவைகள் பிரதட்சணம் செய்கிறோம்.

**20206) கோயில்களில் நிவேதனம் செய்த பின்பு அந்தப் பிரசாதத்தை எதிரில் உள்ள பலிபீடத்தில் வைத்துப் பிறகு காக்கைக்குப் போடுகிறார்கள். இது ஏன்?**

பூஜையை வீட்டில் செய்தாலும் கோயிலில் செய்தாலும் பூஜையின் முடிவில் தாழ்ந்த உயிர்களுக்குச் சிறிதாவது உணவளிக்க வேண்டும். அதுதான் பலி. அதற்குத்தான் பலிபீடம்.

**20206) மனித வாழ்க்கையின் இலட்சியம் என்ன?**

மறைமுகமாகச் சொன்னாலும், வெளி ப்படையாகச் சொன்னாலும், சுருக்கமாகச் சொன்னாலும், விளக்கமாகச் சொன்னாலும், நேரடியாகச் சொன்னாலும், சுற்றி வளைத்து சொன்னாலும் மனித வாழ்க்கையின் இலட் சியம் ஆத்மஞானம் பெறுவதும், உலகிற்கு நன்மை செய்வதுமே ஆகும்.

# ஏன் பைரவ வழிபாடு செய்ய வேண்டும்?

12 ராசிகளையும் தன் உடலில் அங்கங்களாகக் கொண்டவர் ஸ்ரீபைரவர். நவக்கிரகங்களுக்கும் பிராண தேவதையாக இருப்பவரும் பைரவரே.

தேவ, அசுர, மானிடர்களும் அஞ்சும் கிரகம் சனி பகவான் ஆவார்.

சனிக்கு வரம் தந்து, இக்கடமையைச் செய்ய வைத்த சனியின் குரு ஸ்ரீபைரவரே ஆவார்.

சனியின் வாத நோயை நீக்கியவரும் பைரவரே.

தன் தமையன் எமன், பைரவரிடம் அதீத சக்திக்கு வரம் பெற்றதைக் கண்ட அவன் தம்பி சனீஸ்வரன், பைரவரை நோக்கி கடுமையான தவம் இருந்தான்.

தவ வலிமையால் பைரவர் அவன் முன் தோன்றி, மும்மூர்த்திகள் உள்பட அனைவரையும், கால வர்த்தமான நிர்ணயப்படி(ஜோதிட ரீதியாக சனிப்பெயர்ச்சிப்படி) நல்லது தீயது செய்யும் சக்தி அருளினார்.

அப்போது சனீஸ்வரனிடம் ஒரு சத்தியப்பிரமாணம் பெற்றுக்கொண்டார்.

சனீஸ்வரனின் சஞ்சாரத்தால் எவர் ஒருவருக்கு கஷ்டம் கொடுக்க வேண்டியிருந்தாலும், அவர்கள் பைரவரை வழிபட்டு சரணடைந்தால் அவரகளுக்கு சனீஸ்வரன் நன்மையையே செய்ய வேண்டும் என பைரவபெருமானிடம் விரும்பினார்.

அதனால்தான், ஏழரை நாட்டுச் சனி, அஷ்டமச்சனி, ஜன்மச்சனியால் அவதிப்படுவோர் பைரவ வழிபாடு ஒன்றினால் மட்டுமே அத்தொல்லைகளிலிருந்து விடுபட முடியும்.





கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் ஸ்ரீ வரலக்ஷ்மி பூஜையைத் தொடர்ந்து திருவிளக்கு பூஜை நடைபெறுவதை படத்தில் காணலாம். *(படம் : வட கொழும்பு தினகரன் நிருபர்)*

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 02ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 13

### குறள் தரும் சிந்தனை



உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

உயர்ந்தோர் ஏற்றுக் கொண்ட ஒழுக்கம் எனும் பண்போடு வாழக் கற்காதவர்கள் பல நூல்களைப் படித்திருந்தும்கூட அறிவில்லாதவர்களே ஆவார்கள்.

# நாட்டின் நலனுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதே அவசியம்

நாட்டில் 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் கடும் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது. நாடே வங்குரோத்து நிலையை அடைந்தது. மக்கள் கடும் நெருக்கடிகளுக்கும் பாதிப்புகளுக்கும் முகம்கொடுத்தார்கள்.

அந்த நெருக்கடியில் இருந்து மக்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்கவோ, நாட்டை விடுவிக்கவோ எவ்வித திட்டங்களையும் கொண்டிராத அன்றைய ஆட்சியாளர்கள் தம் பதவிகளை விட்டு விலகிச் சென்றனர்.

அதேநேரம் அன்றைய எதிர்க்கட்சியோ நாட்டினதோ, மக்களினதோ நலன்களை முன்னிலைப்படுத்தி தீர்மானங்களை எடுக்கவும் முன்வரவில்லை. அந்தப் பொருளாதார வீழ்ச்சியின் போது இலங்கையை நீரில் மூழ்கும் கப்பலாகவே அவர்கள் நோக்கினர். எதிரணியினர் நாட்டினதும் மக்களினதும் நலன்களையும் கருத்தில் கொள்ளாது செயற்பட்டனர்.

குறிப்பாக கடந்த 2019 ஜனாதிபதித் தேர்தலில் 69 இலட்சம் மக்களின் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியானவர் தமக்கு வாக்களித்த மக்களினதோ நாட்டினதோ நலன்களை கருத்தில் கொள்ளாது இரு வருடங்களில் பதவியை விட்டு வெளியேறினார்.

அதேநேரம் 55 இலட்சம் வாக்குகளைப் பெற்றவர் என்ற அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவரும் அதே இரு வருடங்களில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி தீர்மானங்களை எடுத்து செயற்படத் தவறினார். அதற்காக அவர் வெவ்வேறு காரணங்களையும் கூறி பின்வாங்கினார்.

ஆனால் அன்றைய சூழலில் எதிரணியினர் பொருளாதார வீழ்ச்சியில் சிக்குண்ட மக்களையும் நாட்டையும் வெற்றிகரமாக மீட்டெடுக்க முன்னுரிமை அளித்திருக்க வேண்டும். அதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருக்க வேண்டும். அதைவிடுத்து இலட்சக்கணக்கான மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்ட இவர்கள் பொருளாதார சவாலுக்கு முன்பாக பின்வாங்கிச் சென்றது நியாயப்படுத்தக் கூடியதல்ல.

இலட்சக்கணக்கில் தமக்கு வாக்களித்த மக்களை இரு வருடங்களில் மறந்துவிடுவதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமல்ல. 2019 ஜனாதிபதித் தேர்தலில் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற இருவரதும் செயற்பாடு காரணமாக பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் நாடும் மக்களும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாக வேண்டியிருந்தது. மக்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

ஆனாலும் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்தச் சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி தீர்மானம் எடுக்க முன்வந்தார். இந்நாட்டின் பாராளுமன்ற செயற்பாட்டு அரசியலில் நான்கரை தசாப்தங்களுக்கும் மேலாக அவர் பெற்றுள்ள அரசியல் அனுபவமும் பரந்த அறிவும் அதற்கு பக்கபலமாக இருந்தன.

அவர் நாட்டின் தலைமையை ஏற்றது முதல் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான பொருளாதார வேலைத்திட்டங்களை விரிவான அடிப்படையில் ஆரம்பித்தார். அந்த வேலைத்திட்டங்கள் குறுகிய காலப்பகுதி முதல் பயளிக்கத் தொடங்கின. இதன் விளைவாக பொருளாதார வீழ்ச்சி நிலவிய போது மக்கள் முகம்கொடுத்த நெருக்கடிகளும் அசௌகரியங்களும் கட்டம் கட்டமாக நீங்கலாயின. எரிவாயு, எரிபொருள் தாராளமாகக் கிடைக்கப் பெறக்கூடிய சூழல் உருவானது. நாளாந்த மின்வெட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. நாடு அடைந்து கொள்ளும் பொருளாதாரப் பிரதிபலன்கள் மக்களைச் சென்றடைவதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

இந்த வேலைத்திட்டங்கள் பொருட்களின் விலைக் குறைப்பாகவும், பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லாத வகையில் கிடைப்பதற்கான ஏற்பாடுகளாகவும் அமைந்தன. அத்தோடு நிவாரணங்களாகவும், சலுகைகளாகவும் கூட பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேலும் அரச ஊழியர்களுக்கு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக சம்பள உயர்வும் வழங்கப்பட்டது.

இவ்வாறான பின்புலத்தில் மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் ஏற்படலாயின. ஜனாதிபதியின் பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள் உள்நாட்டில் மாத்திரமல்லாமல் சர்வதேச மட்டத்திலும் வரவேற்பையும் பாராட்டுக்களையும் பெற்றன.

நாட்டில் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதன் ஊடாகவே 2022 ஆம் ஆண்டில் போன்று மீண்டும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாவதைத் தவிர்க்கக் கூடியதாக இருக்கும். நாட்டில் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியே அனைத்துத் தரப்பினரதும் எதிர்பார்ப்பாகவும் உள்ளது. அதற்குத் தேவையான பொருளாதார வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறான சூழலில் நாடு ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டுள்ளது. அதனால் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி தீர்மானங்களை எடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். அதற்கான பொறுப்பு மக்கள் முன்பாக உள்ளது.

editor.tkn@lakehouse.lk

# சிறப்பாகப் பணியாற்றிய மருத்துவர்களை பாராட்டி சென்னையில் விருது வழங்கும் விழா




மருத்துவத்துறையில் சிறப்பாகப் பணியாற்றிய மருத்துவர்களுக்கு விருது வழங்கும் விழா எட்டாவது ஆண்டாக கடந்த சனிக்கிழமை மாலை சென்னை நட்சத்திர விடுதியில் நடைபெற்றது.

இவ்விழாவில் கேரளா ஆளுநர் ஆரிப் முகமது கான் மருத்துவத்துறையில் சேவையாற்றியவர்களை விருது வழங்கி கௌரவித்தார்.

உலகத் தமிழ் வர்த்தக சங்கத் தலைவர் செல்வகுமார் வரவேற்புரை ஆற்றினார். சிறப்பு அழைப்பாளர்களாக வேலூர் வி.ஐ.டி துணைத் தலைவர் டொக்டர் செல்வம், முன்னாள் ஸ்டான்லி மருத்துவமனை முதல்வர் டொக்டர் குணசேகர், தமிழ்நாடு பயிற்சி மருத்து வர் சங்கத் தலைவர் டொக்டர் சி. எம். கே. ரெட்டி ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

இவ்விருது வழங்கும் விழாவில், உலகத் தமிழ் வர்த்தக சங்கத்தின் அங்கமாக செயல்படும் பிங்க் ஹெல்த் கேர், தாகூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றுடன் மருத்துவ சுற்றுலாவுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கேரளா ஆளுநர் முன்னிலையில் கையொப்பம் இடப்பட்டது.

விருது பெற்றவர்கள்:

இன்டெர்வென்ஷனல் கதிரியக்கவியலில் மருத்துவ சிறப்பு விருது_ டொக்டர் பொன் கேத்தேசுவரன், இருதயவியல் துறையில் மருத்துவ சிறப்பு விருது டொக்டர் மூர்த்தி ஜே. எஸ். என், மூத்த இருதய நிபுணர் ஸ்ரீ ராமச்சந்திர_ உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சிறந்த சார்பு விருது_ தாகூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, எ லும்பியல் துறையில் மருத்துவ சிறப்பு விருது டொக்டர் ஏ. நவலாடி சங்கர், சிறந்த கதிர்வீச்சு புற்றுநோயியல் மருத்துவமனை மெரிடியன் மருத்துவமனைக்கு மேரி கியூரி விருது.






கிராமப்புற சேவைகளுக்கான மருத்துவ சிறப்பு விருது_ டொக்டர் ஜே. சரத் ராஷ், பொது மருத்துவத்தில் மருத்துவ சிறப்பு விருது_ டொக்டர் கே. வி. ராஜலட்சுமி, கண் மருத்து வத்தில் மருத்துவ சிறப்பு விருது டொக்டர் ஜெயஸ்ரீ பி, மருத்துவ சுற்றுலா தொழில்முறை விருது, ஜித்து ஜோஸ்_ துணைத் தலைவர், சர்வதேச நோயாளிகள் சேவை, அப்பலோ மருத்துவமனைகள், சமூக மருந்தகத்திற்கான மருத்துவ சிறப்பு விருது மக்கள் மருந்தகம், வேலூர் திரு. சீனிவாசன் செல்வராஜ்.

நிகழ்ச்சியின் நிறைவாக நீரிழிவு நோய் மருத்துவ நிபுணர் மற்றும் கின்னஸ் சாதனை புரிந்த டொக்டர் சத்திய நாராயணன் நன்றியுரை ஆற்றினார்.

நிகழ்ச்சியை உலகத் தமி ழ் வம்சாவளி அமைப்பின் நெறியாளர் ஜான் தன்ராஜ் தொகுத்து வழங்கினார்.

# களுதாவளை கொம்புச்சந்தி அம்மன் ஆலய சடங்கு உற்சவம் இன்று நிறைவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள களுதாவளை கிராமத்தின் மத்தியில் பிரதான வீதியில் அமைந்துள்ள தொன்மைமிகு வரலாற்று சிறப்புமிக்க கொம்புச்சந்தியம்மன் ஆலயத்தின் திருச்சடங்கு இன்று 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு தீமிப்பு மற்றும் குளுத்தில் ஆடுதலுடன் முடிவுபெறுகிறது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் க. விநாயகமூர்த்தி தலைமையில் வைபவங்கள் நடைபெறுகின்றன. மற்றும் கிரியா கால குருவாக ஆலய பிரதம பூசகர் சிவதிரு கு. குலேந்திரன் (குகன்) அவர்களும், உதவிக்குருவாக சிவத்திரு ப. நிலுசன், சிவத்திரு ச. சிவனுஜன் ஆகியோரும் பணியாற்றுகின்றனர். சடங்கு காலங்களில் கூட்டப் பிராத்தனைகள், சமய சொற்பொழிவுகள் முதலிய இந்து சமய கலாசார நிகழ்வுகள் நடைபெற்று வந்தன.

ஆலய வரலாறு மிகவும் தொன்மையானது. பல நூறு ஆண்டுகளுக்கு முன் உருவம் இல்லாத அருவ நிலையில் கண்ணகி அம்மன் வழிபாடு இடம் பெற்று இருக்கின்றது. கண்ணகை அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடைய கொம்பு முறிவிளையாட்டு மிகவும் சிறப்பானதாகும்.

போர்த்தேங்காய் அடித்தல், கொம்பு முறித்தல், கொம்புத்தட்டு எடுத்தல், வடசேரி தென்சேரி தேர் இழுத்தல் சடங்குகள் செய்தல், குளுத்தில் ஆடுதல் முதலிய நிகழ்வுகள் அக்காலத்தில் இடம்பெற்றன. இதனால் களுதாவளை கிராமம் சுமார் ஒரு மாத காலம் விழாக் கோலம் பூண்டு இருக்கும். இக்கொம்பு முறி விளையாட்டைக் காண்பதற்கு மக்கள் பல ஊர்களிலும் இருந்து வந்து இருக்கின்றனர்.



மேலும் கொம்புமுறி விளையாட்டைக் காண்பதற்கு வெல்லாவெளி கண்டத்தைச் சேர்ந்த நாதனைப் பகுதி வேடுவர்கள் வந்தார்கள் என்று களுதேவாலய கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. ழமை பின்வளர அச்சாதியாரும் வருவரவு காணேன் என்று கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

ஆயிரத்துநூறு ஆண்டுகளுக்கு முன் இவ்வாலயத்தில் கொம்புமுறி விளையாட்டு நடைபெற்றதை இதனால் அறிய முடிகின்றது. எனவே இவ்வாலயத்தின் தொன்மையை விளங்கக் கூடியதாகவுள்ளது.

பின்பு 1944 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மழை குன்றி பஞ்சம், பசி, பட்டினி, நோய், பிணி ஏற்பட்டன. அதன் காரணமாக இவ்வாலயத்தில் மழை வேண்டி மாரியம்மன் வழிபாடு சடங்கு மேற்கொண்டார்கள். மழையும் பொழிந்தது. துன்பமெல்லாம் நீங்கியது. அதனைத் தொடர்ந்து மாரியம்மன் சடங்கு இடம் பெற்று வருகின்றது. எனவே மக்கள் அன்று முதல் இன்று வரையும் கொம்புச்சந்தி அம்மன் ஆலயம் என்றே அழைத்து வருவது தனிச்சிறப்பாகும்.

களுதாவளை அம்மன் ஆலய வருடாந்த சடங்கு ஆவணி மாதத்துப் பூரணையை இறுதி நாளாகக் கொண்டு மூன்று நாட்களுக்கும் ஐந்து சடங்குகள் இடம்பெறுகின்றன. மேலும் வெள்ளிக் கிழமைகளிலும் பூரணை தினத்திலும் தைப்பொங்கலிலும், சித்திரை புத்திரனார் தினத்திலும் அத்துடன் விசேட தினங்களிலும் பூசை நடைபெறுகின்றன. எனவே மக்கள் கொம்புச்சந்தி அம்மனை வழிபட்டு நேர்த்திகடன்களையும் நிறைவேற்றி வருகின்றனர்.

அத்துடன் களுதாவளை கொம்புச்சந்தி அம்மன் ஆலய பரிபால மூர்த்தி ஆலயங்களாக பிள்ளையார் ஆலயம், வீரபத்திரர் ஆலயம், நரசிங்கர் ஆலயம், நாகதம்பிரான் ஆலயம், பைரவர் ஆலயம் என்பனவும் அமைந்துள்ளன.

கலைச்சுடர்
**நாராயணபிள்ளை நாகேந்திரன்...**
ஓய்வுநிலை அதிபர், களுவாஞ்சிகுடி

# சவூதி மன்னர் அப்துல் அஸீஸ் சர்வதேச குர்ஆன் போட்டியில் பங்கேற்ற 12 வயது சிறுவன்

ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள காபூன் நாட்டின் ஒரு சிறு கிராமத்தில் வசித்து வந்த 12 வயது சிறுவன் இஸ்லாத்தை ஏற்று இரண்டே ஆண்டுகளில் மன்னர் அப்துல் அஸீஸ் சர்வதேச குர்ஆன் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளார். இவர் குர்ஆனை மனனம் செய்யும் திறமையைப் பெற்றுள்ளார். இதனால் அவர் மக்காவிற்கு சென்று கஃபாவை தரிசிக்கும் வாய்ப்பையும் பெற்றுள்ளார்.

இவருடைய குருவான ஷேக் ஸக்கரியா இதுபற்றிக் கூறுகையில், "மேதியின் வீட்டிற்கு அருகில் உள்ள பள்ளியில் நான் இமாமாக பணிபுரிந்து கொண்டிருந்தேன். ஒருநாள் மேதியும் அவனது தம்பியும் என்னை வந்து சந்தித்தனர். மேதி இஸ்லாம் மதத்தை ஏற்க விரும்புவதாகக் கூறினான். நான் அவனுக்கு ஷஹாதாவை கற்றுக் கொடுத்தேன். இன்று அவன் குர்ஆனை மனனம் செய்து பெரிய போட்டியில் பங்கேற்கிறான் என்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்" என்று குறிப்பிட்டார்.



ஷேக் சக்கரியா கூறுகையில் "மேதி இஸ்லாத்தை ஏற்ற பிறகு அவனது பெயரை மஹ்தி என்று மாற்றினேன். அவனுக்கு அடிப்படை அரபு எழுத்துகளையும் குர்ஆனின் சிறிய சூரத்துகளையும் கற்றுக் கொடுத்தேன். ஒரு வாரத்தில் அவன் ஒரு பக்கத்தை மனனம் செய்யும் அளவுக்கு வேகமாகக் கற்றுக் கொண்டான். குழந்தைகளுக்கான சில இஸ்லாமிய நூல்களையும் அவன் மனனம் செய்தான்" என்றார்.



இப்போது மஹ்தியின் ஆசை என்னவென்றால் முஸ்லிம்களுக்கும் குர்ஆனுக்கும் சேவை செய்வதும் மதீனா இஸ்லாமிய பல்கலைக்கழகம் அல்லது மக்காவின் உம்முல் குரா பல்கலைக்கழகத்தில் படிக்க விரும்புவதுமாகும். முதல் முறையாக கஃபாவைப் பார்த்தபோது அவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். இந்த போட்டி அவனது ஆசையை நிறைவேற்றியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

"காபூனைச் சேர்ந்த போட்டியாளர் மஹ்தி சவுதி அரேபியாவின் மன்னர் சல்மான் பின் அப்துல் அசிஸ் ஆல் சவுத் மற்றும் முடிக்குரிய இளவரசர் முகம்மது பின் சல்மான், இஸ்லாமிய விவகாரங்கள் அமைச்சர் டொக்டர் அப்துல் லாதிப் பின் அப்துல் அசிஸ் ஆல் ஷெய்க்கிற்கு அவர் நன்றி தெரிவித்தார்.



**கலாநிதி அப்துல் சத்தார்...**
விரிவுரையாளர்,
காசிமிய்யா அரபுக்கல்லூரி, புத்தளம்

# கிழக்கின் குரல்



## இந்துமத எழுச்சியாக இடம்பெற்ற காரைதீவு – மண்டூர் மாபெரும் பாதயாத்திரை !

4000 அடியார்கள் பங்கேற்பு





**(காரைதீவு குறூப் நிருபர் சகா)**

வரலாற்று பிரசித்தி பெற்ற "சின்னக் கதிர்காமம்" என அழைக்கப்படும் மண்டூர் ஸ்ரீ முருகன் ஆலயத்துக்கான வருடாந்த தல பாதயாத்திரை கடந்த 17ஆம் தேதி சனிக்கிழமை காரைதீவிலிருந்து அதிகாலை நான்கு மணியளவில் ஆரம்பமாகியது.

ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று 19 ஆம் தேதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருக்கிறது.

காரைதீவில் இருந்து அதிகாலை நான்கு மணிக்கு ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் பாதயாத்திரை, அலங்கரிக்கப்பட்ட முருகப்பெருமான் படங்களுடன் நந்திக்கொடி சகிதம் ஏழு உழவு இயந்திரங்கள் நகர, அடியார்கள் பேரணியும் நகர்ந்தது. அரோகரா கோஷம் விண்ணைப் பிளக்க யாத்திரை உணர்வு பூர்வமாக இடம்பெற்றது. பஜனைகள் குழுவினரின் பஜனை பக்திப் பாடல்களும் வழிநெடுகிலும் இடம்பெற்றன.

சுமார் ஐந்து கிலோமீட்டர் தூரத்திற்கு அடியார்கள் அணி நீண்டிருந்தது.

காவடியாட்டமும் இடையே இடம்பெற்றது.

காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கம் இந்த பாரிய பாதயாத்திரையை வருடாந்தம் நடத்தி வருகிறது.

காரைதீவிலிருந்து அதிகாலை 4 மணிக்கு புறப்பட்ட பாதயாத்திரை கல்முனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, கிட்டங்கி, நாவிதன்வெளி, வேப்பையடி, தம்பலவத்தை ஊடாக பகல் 12 மணியளவில் மண்டூரைச் சென்றடைந்தது.

இடையில் பல இந்து அன்பர்கள் அடியார்களுக்கு நீராகாரம், காலையுணவு, தண்ணீர் போத்தல்கள், பழரசம், பால் சோறு என்று தாராளமாக வழங்கினார்கள். தம்பலவத்தையில் பிரபல சட்டத்தரணியும் அவரது சகோதரரும் இணைந்து சுமார் 5000 பேருக்கு அன்னதானம் வழங்கினார்கள்.

இராஜாங்க அமைச்சர் சிவ. சந்திரகாந்தனினால்

## ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான சமூக சேவை செயற்பாடுகளுக்கான பொருட்கள் வழங்கி வைப்பு!



மட்டக்களப்பு முச்சக்கர வண்டி நலன்புரி சங்க நிர்வாகிகளினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இலவச சமூக சேவை செயற்பாடுகளுக்கான கூடாரம், கதிரைகள், ஒலிபெருக்கி உள்ளிட்ட பொருட்களானது கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவ. சந்திரகாந்தனினால் மேற்படி நிர்வாகிகளிடம் நேற்றைய தினம் கையளிக்கப்பட்டிருந்தது.

மண்முனை பற்று பிரதேச செயலக பிரிவில் குறித்த முச்சக்கர வண்டி நலம்புரி சங்கமானது மரண வீடுகளுக்கான இலவச செயற்றிட்டத்தினை முன்னெடுத்து வரும் நிலையில் தமது சேவையினை மேலும் விஸ்தரிக்கும் பொருட்டு மேற்படி உபகரணங்களை பெற்றுத் தருமாறு கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தனிடம் முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையில் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான மேற்படி உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.

இராஜாங்க அமைச்சர் சிவ. சந்திரகாந்தனின் பன்முகப்படுத்தப்பட்ட 103 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் பல கட்டங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரின் பிரத்தியேக செயலாளரும் கட்சியின் தேசிய அமைப்பாளருமான தம்பிராஜா தஜீவரன், இளைஞர் அணி செயலாளர் சண்முகலிங்கம் சுரேஷ்குமார், மகளிர் அணி செயலாளர் திருமதி சுசிகலா அருள்தாஸ், மட்டக்களப்பு தொகுதி அமைப்பாளர் உருத்திரமூர்த்தி யுவநாதன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், முச்சக்கர வண்டி நரம்புரி சங்க நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## மட்டக்களப்பு, கதிரவெளி பிரதேசத்தில் காணி தகராறு ; துப்பாக்கிப் பிரயோகம்: பொலிஸார் தீவிர விசாரணை

மட்டக்களப்பு, வாகரை, கதிரவெளி பிரதேசத்தில் அமைந்துள்ள காணி தொடர்பில், ஒரு குழுவினருடன் ஏற்பட்ட தகராறின் போது, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

எனினும் துப்பாக்கிச்சூட்டினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதூர் கதிரவெளியில் உள்ள தமது 11 ஏக்கர் காணியில் அபிவிருத்திப் பணிகளுக்காக, தனது மனைவியுடன் கடந்த 17 ஆம் திகதி ஜீப்பில் சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பேக்ஹோ இயந்திரம் மூலம் வீதி புனரமைப்பு பணிகளில் ஈடுபட்ட போது, அவ்விடத்திற்கு வந்த சிலர், வாகரை பிரதேச செயலாளர் தமக்கு பயிர்ச்செய்கைக்கான காணி அனுமதிப்பத்திரம் வழங்கியுள்ளதாக தெரிவித்து, புனரமைப்பு பணிகளை உடனடியாக நிறுத்துமாறு எதிர்ப்புத் தெரிவித்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

அப்போது அங்கு வந்த மக்கள் பேக்ஹோ ஓட்டுநரை தாக்கி, பேக்ஹோவின் கண்ணாடியை உடைத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.கூட்டுத்தாபனத்தின் தலைவர் பாதுகாப்பின் நிமித்தம் அரசாங்கம் வழங்கிய துப்பாக்கியால் தரையில் சுட்டுள்ளார்.

இது தொடர்பாக, பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரொஹான் சாலிய அபேசிங்க, வாகரை பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து, அவருக்கு வழங்கப்பட்ட கைத்துப்பாக்கி மற்றும் பத்து தோட்டாக்கள் வழக்கு தடையப்பொருட்களாக பொலிஸாரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளன.

## திருகோணமலை மாவட்டத்தில் 43,000 ஏக்கர் காணிகள் அபகரிப்பு

**(தம்பலகாமம் குறூப் நிருபர்)**

திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 43ஆயிரம் ஏக்கர் விவசாய காணிகள் எல்லையிடப்பட்டு அபகரிப்பு செய்யப்பட்டுள்ளது. இதுபற்றி ஜனாதிபதியிடம் பேசிய போது உரிய அமைச்சர்களுடன் கதைத்து தீர்வை பெற்றுத்தருவதாக தெரிவித்தார் என இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலை, புல்மோட்டை பகுதியில் தமிழ், முஸ்லிம் மக்களுடனான சந்திப்பொன்று (16) இடம்பெற்றபோதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து, குச்சவெளி பிரதேச செயலக பகுதியில் 10435 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆட்சியாளர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து உரிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்காக முயற்சிப்பதோடு ஆசிரியர் வெற்றிடங்கள் 500, திருகோணமலை பொது வைத்தியசாலையில் 100 சிற்றூழியர் வெற்றிடம், கல்வி, சுகாதாரம், சமூக மேம்பாடு உள்ளிட்ட விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டு கட்சி வேறுபாடுகளின்றி ஒன்றிணைந்து செயற்படுவோம்.

1976 ன் பின் கட்டுகுளப் பகுதிக்கு முதல் பாராளுமன்ற பிரதிநிதி நானே. புல்மோட்டை, திரியாய், குச்சவெளி என்ற பிரதேச பாகுபாடின்றி அனைத்து சேவைகளையும் சரிவர சரியாக செய்வேன் இதற்கான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

பிரான்ஸ் நாட்டின் அதிபதியான நெற்போலியன் கூறியது போன்று "பல காலம் பேச்சாளராக இருப்பதை விட சில மணி நேரம் செயலாளராக இருப்பது சிறந்தது" எனக் கூறினார்.

குறித்த சந்திப்பில் முன்னால் குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் முபாரக் உட்பட பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## வாகன விபத்தில் சிறுவன் உயிரிழப்பு

**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

பனிச்சங்கேணிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுவன் ஒருவன் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். வாகரை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பனிச்சங்கேணி பகுதிக்கு தாயுடன் முச்சக்கர வண்டியில் பயணித்த மீராவோடை எல்லை குறுக்கு வீதியைச் சேர்ந்த எட்டு வயதுடைய மஹ்தி என்ற சிறுவன் ஒருவனே இவ்வாறு விபத்தில் உயிரிழந்துள்ளார். முச்சக்கர வண்டி வீதியோரம் நிறுத்தி வைக்க ப்பட்டிருந்தவேளை, சிறுவன் வீதியை குறுக்காக கடக்கும் போது, வேகமாக வந்த வேனினால் மோதுண்டு இச் சம்பவ இடம்பெற்றுள்ளது. சிறுவனின் உடல் வைத்திய பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தை ஏற்படுத்திவிட்டு வேன் சாரதி வேனை நிறுத்தாமல் சென்றுள்ளதாக விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. குறித்தை விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பில்

## நாட்டிலுள்ள சகல மத்ரஸாக்களுக்கும் பொதுவான புதிய பாடவிதானம் : அறிஞர் குழுவும் நியமனம்

**(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)**

நாட்டிலுள்ள சகல மத்ரஸாக்களுக்கும் பொதுவான புதிய பாடவிதானமொன்றினை அமுல்படுத்தி, மத்ரஸாக் கல்வியை மேம்படுத்தும் வேலைத்திட்டமொன்று தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளையின் கல்விப் பணிப்பாளர் மேஜர் என்.ரி.நசுமுதீன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரில், கல்வி அமைச்சு இவ்வேலைத் திட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்தி வருவதாகவும், இப்பணியை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு கல்வி அமைச்சுச் செயலாளர் திலகா ஜயசுந்தரவினால் ஏழு பேர் கொண்ட அறிஞர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் நசுமுதீன் மேலும் தெரிவித்தார்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் பீட, ஓய்வுநிலைபேராசிரியர் எம்.எஸ்.எம்.ஜலால்தீன், மகரகம, தேசிய கல்வி நிறுவக பிரதிப்பணிப்பாளர் நாயகம் கலாநிதி எஸ்.ஏ.டி. சமரவீர, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை கலாநிதி அஹமட் அஸ்வர், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ், பேராதனை பல்கலைக்கழக கலைப்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி எம்.எல்.எம்.ஹனிபா, கிழக்குப் பல்கலைக்கழக அரபுமொழி பிரிவுத் தலைவர் மௌலவி ஐ.எம். தாலிப், கொழும்பு ஹமீத் அல் ஹூசைனியா வித்தியாலய அதிபர் எம்.ஆர்.எம்.றிஸ்கி ஆகியோர் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

## கமநல விருதுகள் 2024



**(தம்பலகாமம் குறூப் நிருபர்)**

கடந்த வருடம் முழுவதும் சிறப்பாக தமது செயற்திறன்களை வெளிப்படுத்திய A, B, C தர கமநல சேவை நிலையங்களுள் ஒவ்வொரு பிரிவிற்குமான மாவட்ட மட்ட, மாகாண மட்ட மற்றும் தேசிய மட்ட போட்டிகள் இடம்பெற்றது. C தர பிரிவைச் சேர்ந்த கமநல சேவை நிலையங்களுக்கு இடையேயான போட்டியில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் து.தர்சானந்தன் தலைமையிலான உப்புவெளி கமநல சேவை நிலையமானது மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் மட்டுமின்றி தேசிய மட்டத்திலும் முதல் இடத்தை பெற்றுள்ளது.

## புதிதாக 32 வைத்தியர்கள் சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கு புதிதாக 32 வைத்தியர்கள் சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளதாக. அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட 07 சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகளுக்கு வைத்தியசாலைகளில் உள்ளக பயிற்சிகளை முடித்த புதிதாக நியமனம் பெற்ற 32 வைத்தியர்களுக்குரிய சேவை நிலையங்களுக்கான கடிதங்கள் கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக வைத்தியர்கள் பற்றாக்குறை நிலவிய தெஹியத்தக்கண்டி, பதியத்தலாவ, மஹாஓயா, தமன, உகன ஆகிய பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள ஆரம்ப, பிரதேச மற்றும் மாவட்ட வைத்தியசாலைகளுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு புதிய வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்தாக தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் பணிப்புரைக்கமைய புதிய வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒலுவில் அல்–மதீனா வித்தியாலய மாணவர்கள் தேசியமட்ட மனக் கணிதப் போட்டியில் வெற்றி





**(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)**

அக்கரைப்பற்று கல்வி வலயம், அட்டாளைச்சேனை கல்விக் கோட்டம் என்பனவற்றின் ஆளுகைக்குட்பட்ட ஒலுவில் அல்மதீனா வித்தியாலய மாணவர்கள் இருவர் தேசிய மட்ட மனக் கணிதப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டி வெற்றிக்கிண்ணங்களைப் பெற்றுக் கொண்டனர். நாடளாவிய ரீதியில் சுமார் 03 ஆயிரம் மாணவர்கள் போட்டிகளில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் அண்மையில் நடைபெற்ற தேசிய மட்ட மனக்கணிதப் போட்டியில் பங்குபற்றிய மாணவி ஏ.எம்.முனீஷh பலக் இரு பிரிவுகளிலும், மாணவன் சஷhன் பாஹிர் ஒரு பிரிவிலும் வெற்றியீட்டிவெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இதன் மூலம் பாடசாலைக்கும், ஒலுவில் பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்துள்ளதாக அதிபர் கே.எல். அமீர் தெரிவித்தார்.


# விலைமனுக்களுக்கான அழைப்பு

**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்**

**விலைக்கோரல் இல. 059/T/2024**

**கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், பயணிகள் முனையக் கட்டிடத்தில் வளியைக் கையாளும் அலகுகளை மறுசீரமைத்தல் மற்றும் புத்தம் புதிய வளியைக் கையாளும் அலகுகளை நிறுவுதல்**

**(AIR HANDLING UNITS REFURBISHMENT AND INSTALLING BRAND NEW AIR HANDLING UNITS AT PASSENGER TERMINAL BUILDING, BANDARANAYAKA INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், பயணிகள் முனையக் கட்டிடத்தில் வளியைக் கையாளும் அலகுகளை மறுசீரமைத்தல் மற்றும் புத்தம் புதிய வளியைக் கையாளும் அலகுகளை நிறுவுவதற்காக விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு ஆவணத் தொகுதியொன்றை மீளளிக்கப்படாத கட்டணமாக பத்தாயிரம் ரூபா (10,000.00) தொகையை விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் ஆவணங்களிலேயே விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் இதன்பொருட்டு விலைமனுதாரரால் வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவு அலுவலகத்திலிருந்து 2024-08-20ஆம் திகதி முதல் 2024-09-10ஆம் திகதி வரையில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் 3.00 மணி வரை விலைக்கோரல் ஆவணத் தொகுதியைக் கொள்வனவு செய்யலாம். தேவையானால் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தில் அமைந்துள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். மேலும் விலைமனுதாரரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைத்து, இது கிடைத்தமைப் பற்றிய சான்றொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைக்கோரல்கள் 2024 செப்டெம்பர் 11ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன்பின் குறித்த விலைமனுக்கள் வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவில் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் முறையாக அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

விலைக்கோரல் பிணை முறியாக, இலங்கையில் செயற்படும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வங்கியொன்றில் வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரின் பெயரில் கோரும் போது செலுத்தப்படும் ஒன்பது இலட்சம் ரூபாவுக்கான (900,000.00 ரூபா) பெறுமதியான வங்கிப் பிணை முறியொன்றை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-08-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், இயந்திரவியல் பொறியியல் பராமரிப்புக் கட்டிடத்தின் பிரிவின் கூட்ட அறையில் இடம்பெறும்.

ஏதாவது மேலதிக விபரங்களை வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவின் 011-2264600 அல்லது 011-2264609 எனும் தொலைபேசி இலக்கங்களில், head.scm@airport.lk எனும் மின்னஞ்சல் முகவரியில் அல்லது www.airport.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

## மடவளை தேசிய பாடசாலையில்

# கெடட் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்கள் பாராட்டி கௌரவிப்பு

பழைய மதீனியன் கீழைத்தேய பேண்ட் சங்கத்தின் ஏற்பாட்டில் மடவளை தேசிய பாடசாலையின் பேண்ட் வாத்தியக் குழுவினர் மாணவர் படையணி கெடட் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களைப் பாராட்டி சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் அஷ்ஷெய்க் அஸனார் ரஹீம் தலைமையில் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக 23 வது இராணுவ படைப்பிரிவின் கட்டளைத் தலைமை அதிகாரி லெப்டினல் கேணல் ஏ. எம். டி அதிகாரி கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற பொலிஸ் அத்தியட்சகர் ஏ. எச். எம். நசீம் மற்றும் பேண்ட் வாத்தியக் குழு பயிற்றுவிப்பாளர் மத்தீஸ் ஆகியோர் பங்கேற்றனர். அத்துடன் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் ஷிப்லி மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் சார்பாக ஹுனைஸ் தாஹா ஆகியோர் கலந்து கொண்டனர்.











ஆசிரியர்கள் பழைய மதீனியன்ஸ் கீழைத்தேய பேண்ட் சங்கத்தின் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி, அமைப்பாளர் சாஜீத் மற்றும் உறுப்பினர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நன்றியுரையினை உப அதிபர் எம். ஆர்.எம். ராசி நிகழ்த்தினார்.

பழைய மதீனியன் கீழைத்தேய பேண்ட் சங்கத்தினர் அகில இலங்கை பேண்ட் வாத்தியக் குழு பயிற்றுவிப்பாளர் விசாரத ஜீ. எச். மத்தியூஸ் அவர்களுடைய 47 வருட சேவையைப் பாராட்டி இங்கு கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வினை நுஹா மற்றும் ரிஸ்மியா ஆகிய இரு ஆசிரியைகள் தொகுத்து வழங்கினர்.

**மடவளை மதீனா தேசிய பாடசாலையின் அதிபர் அஸனார் ரஹீம் தலைமையுரையாற்றும் போது;** இலங்கையில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளில் கீழைத்தேய பேண்ட் வாத்தியக் குழுவின் மூலம் எமது பாடசாலை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. எமது பாடசாலை கற்கின்ற போது ஏதோ ஏதாவது ஒரு இணைப்பாட விதான செயற்பாடுகளில் செயற்பட வேண்டும் என இலங்கையின் கல்வி அமைச்சு சுற்று நிரூபங்கள்சுட்டிக்காட்டுகின்றன. அந்தவகையில் இப்பாடசாலையில் 1700 பேருக்கும் மேலான மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி பயிலுகின்றார்கள். மாணவர்களுடைய கற்கை காலத்தில் குறைந்தது ஒரு இணைப்பாட விதான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக மாணவர்கள் இணைப்பாட விதான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற போது தலைமைத்துவப் பண்புகளாக இருக்கலாம். அதே போன்று ஆளுமைப் பண்புகளாக இருக்கலாம். இவ்வாறு எந்தவொரு துறைகளிலும் மாணவர்களது இணைப்பாடவிதான செயற்பாடுகள் காணப்படுகின்றன. கண்டிப்பாக ஒவ்வொரு மாணவர்களும் கவனம் செலுத்த வேண்டும். இந்தப் பாடசாலையில் விளையாட்டு தொடக்கம் ஏனைய பாட ரீதியிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குரிய சந்தர்ப்பங்கள் மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் பழைய மதீனியன் கீழைத்தேய பேண்ட் சங்கத்தினர் இந்தப் பாடசாலையின் பெயர் புகழ் நிலைத்திற்கு இருப்பதற்கு பெரும் உறுதுணையாகவும் ஒத்துழைப்பாகவும் இருந்து வருகின்றனர். இந்தச் சங்கத்தினரை இந்த இடத்தில் நாங்கள் கௌரவமாக ஞாபகப்படுத்துகின்றோம். அவர்களுடைய சேவையை தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்று அதிபர் மேலும் தெரிவித்தார்.

**பாடசாலையின் பிரதி அதிபர் எஸ். ஏ. சி.எம். ஜிப்ரில் வரவேற்புரையாற்றும் போது**,

எமது பாடசாலையின் கீழைத்தேய பேண்ட் வாத்தியக் குழுவினர் வரலாற்றில் முதல் தடவையாக மாணவப் படையணியினர் கெடட் பயிலுனர் பயிற்சியை முடித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். மாணவர்கள் தங்களுடைய பாடசாலைக் காலத்தில் வெளிக்காட்டப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் பாடசாலைகளினால் ஏற்பாடு செய்யப்படுகின்றது. இந்த ஏற்பாடு செய்யப்படுகின்ற சகல சந்தர்ப்பங்களிலும் பங்கேற்கும் மாணவர் மாணவிகளுக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப்படும். அந்த அடிப்படையில் இன்று இந்த நிகழ்வில் பாராட்டப்படவுள்ள மாணவர்களுக்கு பாடசாலையின் சார்பாக எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கையில் உள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கு மத்தியில் கீழைத்தேய பேண்ட் வாத்தியக் குழுவென இடம்பெற்றிருப்பது மடவளை மதீனா தேசிய பாடசாலை மாத்திரம் ஆகும். அதேபோன்று இந்நிகழ்வை கௌரவப்படுத்தும் வகையில் 23 வது தேசிய இராணுவ படையணியின் கட்டளையிடும் படைத்தளபதி ஏ. எம். டி அதிகாரி மற்றும் பேண்ட் வாத்தியக் குழு மாணவர்களைப் பயிற்றுவித்து வருகின்ற பயிற்றுப்பாளர் மெத்யூ சேர். மதீனியன் கீழைத்தேய பேண்ட் வாத்தியக் குழுவின் சங்கத்தின் தலைவர் சஹீட். எம். ரிஸ்மி செயலாளர் சாஜீத் உறுப்பினர்கள் ஆகிய அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# 23ஆவது இராணுவ படைப்பிரிவின் கட்டளையிடும் படைத்தலைமை அதிகாரி லெப்டினல் கேணல் ஏ. எம். டி அதிகாரி உரையாற்றும் போது,

மதீனா பாடசாலையின் கீழைத்தேய பேண்ட் வாத்தியக் குழு கெடட் பயிற்சி முகாமை முடித்தமையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். காரணம், நீண்ட காலமாக இப்பாடசாலையின் பேண்ட் வாத்தியக் குழுவினரை பயிற்றுவிப்பாளர் மெத்தீஸ் அவர்கள் சிறந்த முறையில் பயிற்சிகள் வழங்கி மிகவும் கவனமாக வழி நடத்தி வருகின்றார். அவர் எங்களுடன் தொடர்பினைக் கொண்டதால் கெடட் பயிற்சிகள் வழங்குவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இது முஸ்லிம் பாடசாலைகளின் வரலாற்றில் முதல் தடவையாக கீழைத்தேய பேண்ட் வாத்தியக் குழு தேசிய படையணியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மதீனா தேசிய பாடசாலைக்கும் தற்போதை அதிபர், பிரதி, உப அதிபர்கள்,ஆசிரியர் குழாத்தினர்கள், இது தொடர்பில் பங்காற்றிய அனைத்து தரப்பினர்களுக்கும் மற்றும் பழைய மாணவர்கள் அனைவருக்கும் பெருமையுடன் கூற முடியும். இலங்கையிலுள்ள பெரு எண்ணிக்கையிலான பாடசாலைகள் பங்கேற்றனர். அதில் கண்டி மாவட்டத்தில் மதீனா தேசிய பாடசாலை இப்படியான வரலாற்றில் முதல் தடவையாக சந்தோசமான செய்தி பெற்றுக் கொடுத்தமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். நானும் அந்த விடயம் தொடர்பில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எங்களுடைய மாணவப் படையணியின் பணிப்பாளர் விசேடமாக ஒரு வேண்டுகோளை முன் வைத்தார். உண்மையிலே அதிகளவில் பாடசாலைகளில் மாணவர் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடும் போது சகல பாடசாலைகளுக்கும் சமமான வாய்ப்பினை வழங்க வேண்டும் என்று கூறியுள்ளார். நாங்கள் இன ரீதியாக பிரிந்து முரண்பட்டுக் கொண்டு என்று இல்லாமல் இன்று எல்லோரும் ஒரு தாய் பிள்ளைகளைப் போல ஒற்றுமையுடன் செயற்பட்டு வருகின்றனர். அந்த வகையில் எல்லோரும் ஒன்றுபட்டு இந்தப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும். இந்த நிகழ்வுக்கு என்னை அழைத்து அதிபர் உள்ளிட்ட பழைய மதீனியன் பேண்ட் சங்கத்தினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதிலும் விடேசமாக சஹீட் எம். ரிஸ்மி மற்றும் சாஜித் அக்பர் ஆகியோர் இருவரையும் நினைவு கூர்ந்து விடைபெறுகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

Old Madinian eastern band union :
Patron: Alshaikh Asanar Raheem, Principal
Vice patron:S.A.C.M Jibreel,Dp
Advisers:
Visaradha G .H .Mathews
A.H.M.Nazeem .Sp.rtd
President
Saheed M Rismy
Vice President
A.M Ibnu Rifas
Vice President
A.A.M Firdaus
Founder
M.A.M Saajith
Secretary
M.B.M Farzan
Vice Secretary
A.W Wazeer
Treasurer
J.A.J Suhail
Members
A.A Muhaad
Saheed Rifan
A.W Rizad Ahmad
M.L.M Shukry
M.I.M Shibly
A.A.M Jaazil
M.A.M Jaazil
A.H.M Faizaan
M.M Jesmy
A.R.M Sufaaly
A.M.M. Nazil
A.C.M.Nafees
M.M Shibly
M T M Jazil

**# அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவரும் மடவளை பேண்ட வாத்தியக் குழுவின் சங்கத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி உரையாற்றும் போது,**

மடவளை மதீனா தேசிய பாடசாலை நாடு போற்றும் அளவுக்கு பல்வேறு பட்ட நிகழ்வுகளை நூற்றாண்டு விழா முன்னிட்டு நடத்துகின்ற வேளையில் மதீனாவுக்கு ஒரு வரலாறு இருப்பது போல் மதீனா பேண்ட் வாத்தியக் குழுவுக்கும் ஒரு வரலாறு இருக்கின்றது. மதீனா பேண்ட் வாத்தியக் குழு 47 வருடங்களைத் தாண்டி இன்னும் மூன்று வருடத்தில் பொன் விழாவைக் கொண்டாடவுள்ளன. அரசாங்கம் முஸ்லிம் பாடசாலைகளிலுள்ள பேண்ட் வாத்தியக் குழுக்களை ஊக்குவித்து அதனை முன்னேற்ற வேண்டும் என்ற திட்டத்தில் இயங்கி வருகின்றன. இத்தகைய காலத்தில் 47 வருட காலமாக மதீனா தேசிய பாடசாலையின் பேண்ட் வாத்தியக் குழு இயங்கிக் கொண்டிருக்கிறது.

2023 இல் ஜனாதிபதி அவர்களின் பணிப்புரைக்கு இணங்க பாதுகாப்பு அமைச்சின் ஊடாக முஸ்லிம் பாடசாலைகள் மாணவர்கள் முப்படைகளில் ஏன் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை என்ற ஆய்வினை மேற்கொண்ட போது பேண்ட், கெடட் மாணவர் படையணிகளில் ஆர்வம் காட்டாமல் தூரமாகி இருப்பதன் மூலமாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அறியப்பட்டது.



இதனை ஊக்குவிக்கும் வகையில் பாதுகாப்பு அமைச்சினால் அதற்கான ஒரு குழுவினரை நியமித்து செயற்பட்டு வருகின்றனர். அதில் நானும் ஒருவராகக் கடமையாற்றி வருகின்றேன். மதீனா தேசிய பாடசாலையின் பழைய மாணவன் என்ற வகையில் பெருமிதம் அடைகின்றேன். இந்த பேண்ட் வாத்தியக் குழு 1977 இல் ஆரம்பிக்கப்பட்டு அக்கால கட்டத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த பி. வேரபிட்டிய அவர்கள் விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட போது ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் பின்பு 1978 ஆம் ஆண்டு கெடட் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. மேலத்தேய கெப்டனாக பனுர்தீன். அதில் முதல் கெடட் சார்ஜனாக நான் இருந்தேன். இன்னும் இந்த பாடசாலையில் பேண்ட் வாத்தியக் குழுவின் சங்கத்தில் இருக்கின்றேன்.

1978 வத்துகாமம் பிரதேசத்தில் பிராந்திய மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றது. அன்று இருந்து இன்று வரை மதீனா தேசிய பாடசாலை தன் பெயரை ஓங்கச் செய்துள்ளார்கள்

1990 களில் பள்ளேகலையில் நடைபெற்ற கம்உதாவ நிகழ்ச்சியில் அன்றைய எமது நாட்டின் ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள் மடவளை மதீனா பேண்ட் வாத்தியக் குழுவின் பெயரை குறிப்பிட்டுப் பேசியமை இன்றும் மறக்காமல் பேசப்பட்டு வருகின்றன.

1990 வரையும் சிறப்பாக இயங்கி வந்த இந்த பேண்ட் வாத்தியக் குழு. காலப் போக்கில் 2002 இல் தேசிய மீலாத் விழாவின் போது ஏதோ ஒரு வகையில் முடக்கப்பட்டு 2004 ஆம் ஆண்டு இப்பாடசாலையின் அஷ்;ரஃப் ஞாபகார்த்த மண்டம் திறப்பு விழாவில் மீண்டும் அபிவிருத்தி செய்யப்பட்டது. ஆனால் அதற்கு ஏதோ ஒரு வகையில் மீண்டும் முடக்கப்பட்ட நிலையிலே 2010 ஆம் மேலைத்தேய வேண்ட் பாத்தியக் குழு ஆரம்பிக்கப்பட்டது. அது 2016 ஆம் ஆண்டு வரையிலும் வெற்றியளிக்கவில்லை. அதன் பின்னர் 2016 இல் சாஜித் குழுவினர்கள் பேண்ட் வாத்தியக் குழு சங்கம் ஒன்றை தாபித்து இதன் ஊடாக அபிவிருத்தி செய்ய முன்வந்த போது பேண்ட் வாத்தியக் கருவிகள் உபகரணங்கள் இருக்கவில்லை. அதற்குத் தேவையான அனைத்து உதவிகளை இயன்றவரை செய்து கட்டியெழுப்பி வந்துள்ளார்கள். அப்பொழுது கீழைத்தேய பேண்ட் வாத்தியக் குழுவின் கெப்டன் ஏ. ஏ. எம். யாசிர். கெடட் சாஜனாக நான் இருந்தேன். சுமார் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட செலவுகளைச் செய்து பேண்ட் வாத்தியக் குழுவை மேம்படுத்தியுள்ளார்கள்.

இந்த பேண்ட் வாத்தியக் குழுவுக்கு ஒரு சில வாத்தியக் கருவிகள் இல்லாமல் உள்ளதாக அதிபர் அவர்கள் எமக்கு கோரிக்கை விடுத்தார்கள். எதிர்காலத்தில் அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யத் தயாராக இருக்கின்றோம் என்று கூறிக் கொள்கின்றோம்.

இந்த நாட்டிலே பாதுகாப்பு அமைச்சு ஊக்கு வித்து பாடசாலையின் நாமத்திற்கு அங்கீகாரத்தை வழங்குகின்ற போது இந்தக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களுக்குத்தான் பெருமையாகும். யார் என்ன சொன்னாலும் மாணவர்களாகிய நீங்கள் உங்களை வலுப்படுத்திக் கொண்டு நல்ல பிரஜையாக இந்த நாட்டிலே உருவாக வேண்டும் என்று வாழ்த்தி அதிபர் அவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பாடசாலை சமூகத்திற்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன். அகில இலங்கை மட்டத்தில் மாணவர் படையணி இப்பயிற்சியை மேற்கொண்ட போது 1400 பாடசாலைகள் பங்கேற்றன.

இப்பாடசாலைகள் மத்தியில் தரப்படுத்தலின் போது மடவளை மதீனா தேசிய பாடசாலை பேண்ட் வாத்தியக் குழுவின் மாணவப் படையணி பயிற்சியினை தரப்படுத்திய போது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**இக்பால் அலி**





## பூண்டுலோயா தீ விபத்து சம்பவம்

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குமாறு மருதப்பாண்டி ராமேஸ்வரன் எம்.பி கோரிக்கை




(தலவாக்கலை குறூப் நிருபர்)

பூண்டுலோயா சீன்பழைய தோட்டத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில், பாதிக்கப்பட்ட மக்களை நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீன் பழைய தோட்டம் என அழைக்கப்படும் சீன் லோவர் பூண்டுலோயா தோட்டத்தில், கடந்த 16 ஆம் திகதி இரவு ஏற்பட்ட திடீர் தீ விபத்தில், 25 குடியிருப்புக்களை கொண்ட தொடர் லயன் குடியிருப்பில் 17 வீடுகள் முற்றாக எரிந்து தீக்கிரையாகின.

இத் தீ விபத்து காரணமாக, அக்குடியிருப்புக்களில் வசித்த 28 குடும்பங்களைச் சேர்ந்த 88 பேர் இடம்பெயர்ந்துள்ளதாகவும், அவர்களில் 3 கர்ப்பிணித் தாய்மார்களும், 12 பாடசாலை செல்லும் சிறுவர்களும் அடங்குகின்றனர்.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன் சம்பவ இடத்திற்கு நேரில் சென்றிருந்தார்.

இதன்போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய உதவிகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மலைச்சாரல்

# பலாங்கொடை முன்னாள் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் ஆதரவு ஜனாதிபதி ரணிலுக்கே

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதாக, பலாங்கொடை தேர்தல் தொகுதியின் பொதுஜன பெரமுனக் கட்சியின் முன்னாள் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் ஒன்றுகூடி ஏகமனதாக தீர்மானித்தனர்.

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இரத்தினபுரி மாவட்ட இணைப்புக் குழு கூட்டத் தலைவருமான அகில எல்லாவள தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சகல உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போதே, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக தீர்மானித்துள்ளனர்.



இந்தியாவின் 78 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, மாத்தளை சர்வதேச மகாத்மா காந்தி சபை பிரதான மண்டபத்தில், அண்மையில் நடைபெற்ற சுதந்திர தின வைபவத்தின்போது. அமரர் மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிப்பதை படத்தில் காணலாம்.

(படம் மாத்தளை சுழற்சி நிருபர்)

# 5000 ரூபா போலி நாணயத்தாள்களுடன் நகை வாங்க சென்ற சந்தேகநபர் கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

5000 ரூபா 107 போலி நாணயத்தாள்களுடன் நகைவாங்க சென்றவரை இரத்தினபுரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இரத்தினபுரி நகரில் அமைந்துள்ள நகை வியாபார நிலையமொன்றில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நகைக்கடையில் நகைகளைப் பார்வையிட்ட சந்தேகநபர் மேசையின் மீது பணக்கட்டை வைத்துவிட்டு நகை தேடுவதை தொடர்ந்துள்ளார்.

இதன்போது, சந்தேகநபர் பணக் கட்டை வைத்த விதம் மற்றும் அவரின் ஏனைய செயற்பாடுகள் தொடர்பாக சந்தேகம் கொண்ட வியாபார நிலைய நிர்வாகம் பொலிஸாருக்கு அறிவித்துள்ளது.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், அவரைக் கைது செய்துள்ளதுடன், பண நோட்டுக்களையும் அவர் தன் வசம் வைத்திருந்த பென்டிரைவ் (pendrive) ஒன்றையும் மீட்டுள்ளனர். மேலும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார், சந்தேகநபரை நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

# சீரற்ற காலநிலையால் 26,898 பேர் பாதிப்பு ; 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

நாட்டைச் சூழவுள்ள கீழ் வளிமண்டலத்தில் தளம்பல் நிலை காரணமாக நாட்டின் தென்மேற்குப் பகுதியில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை இன்றும் (19) மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள அவதானத்துடன் செயற்படுமாறு வானிலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் பொதுமக்களிடம் வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில், மழையுடனான காலநிலையால் நாடளாவிய ரீதியில் 8,522 குடும்பங்களை சேர்ந்த 26,898 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 6 மாவட்டங்களுக்கு மஞ்சள் நிற (ஆரம்ப நிலை) மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை, மாத்தறை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மஞ்சள் நிற (ஆரம்பக்கட்ட) மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. காலி, களுத்துறை, கேகாலை, மாத்தறை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் ஒருசில பகுதிகளுக்கு செம்மஞ்சள் நிற (இரண்டாம் கட்ட) மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இ.தொ.காவின் உறுப்பினர் திகாம்பரத்துடன் இணைவு

தலவாக்கலை குறூப் நிருபர்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினரும், அக்கரப்பத்தனை பிரதேச சபையின் முன்னாள் தலைவருமான இராமன் கோபாலகிருஸ்ணன், பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கத்துடன் இணைந்துக்கொண்டார்.

ஹட்டன் அஜந்தா விருந்தகத்தில் நேற்று (18) நடைபெற்ற தொழிலாளர் தேசிய சங்கத்தின் கட்சி அமைப்பாளர்களுக்கிடையிலான பொது கூட்டத்தின்போது, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர் இராமன் கோபாலகிருஸ்ணன் தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'பெருந்தோட்ட மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவோம்'

# ஜனாதிபதி தேர்தலை முன்னிறுத்தி சர்வமத ஊடகவியலாளர் சந்திப்பு

(கினிகத்தேனை தினகரன் நிருபர்)

'பெருந்தோட்ட மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவோம்' என்ற கருப்பொருளில் 200 வருடத்தை நினைவு கூர்ந்தும், தற்போது நாட்டில் இடம்பெறும் ஜனாதிபதி தேர்தலை முன்நிறுத்தியும் சர்வமத ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நேற்று (18) ஹட்டன் கரிட்டாஸ் செட்டிக் நிறுவனத்தில் நடத்தப்பட்டது.



இதன்போது, தலவாக்கலை திரு பற்றிசியா பாடசாலை மாணவர்களினால் "விடியலை நோக்கி" என்ற கருப்பொருளில், உரிமைகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பதை தெளிவூட்டும் வகையில், வீதி நாடகமொன்றும் அரங்கேற்றப்பட்டது.

இதனை தொடர்ந்து, மலையக மக்களின் 200 வருடத்தை குறிக்கும் வகையில் நடைபெற்ற சர்வமத ஊடவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த பங்கு தந்தை நியுமன் பீரிஸ்,

இந்த மலையகத்தை பல வழிகளிலும் அழகுபடுத்தியவர்கள் இந்த மலையக மக்கள். இருப்பினும் அவர்களின் வாழ்க்கை இன்னும் சிறக்கவில்லை. அவர்கள் வாழ்வதற்கு இடம்கூட இல்லை. எனவே அவர்களின் வாழ்க்கை ஒளிமயமாக்கப்படல் வேண்டும். அதற்காக எமது கண்டி கரிட்டாஸ் நிறுவனம் மக்களை தெளிவுப் படுத்தும் வேலையை ஆரம்பித்துள்ளது.

இம் மக்கள் உழைப்புக்கேற்ற ஊதியம் இன்றி, தோட்ட உரிமைகள் இன்றி, நிலவுரிமைகள் இன்றி வாழுகின்றனர். மேலும் தோட்டத்தில் வாழுகின்ற இம் மக்கள் இந்த தேசத்தில் வாழுகின்ற மக்கள் என நினைவில் கொள்ளவேண்டும்.

எதிர்வரும் தேர்தலில் மக்கள் சரியான ஒரு பிரதிநிதியை தேர்வு செய்ய வேண்டும். இதனை எமது நிறுவனத்தினூடாக மக்களை தெளிவுப்படுத்தியிருக்கின்றோம். எமது மக்கள் சலுகைக்காக குரல் கொடுப்பவர்களாக அன்றி, எதிர்வரும் தேர்தலை உரிமைக்காக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

ஐ.ம.ச அரசாங்கத்தில்

# மதுபானம் இல்லாத யுகமொன்று உருவாகும் ; அரசியல் சூதாட்டம் முற்றாக நிறுத்தப்படும்

## கண்டியில் எதிர்க்கட்சி தலைவர் தெரிவிப்பு



(அக்குறணை குறூப் நிருபர்)

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் மதுபானம் இல்லாத யுகமொன்றை உருவாக்க முயற்சிப்பதாகவும் அரசியல் சூதாட்டம் முற்றாக ஒழிக்கப்படும் எனவும் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை (16) கண்டிக்கு விஜயம் செய்தன் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச, புனித சமய ஸ்தலங்களுக்கு சென்றிருந்ததுடன் சர்வமத தலைவர்களையும் சந்தித்து நல்லாசிகளையும் பெற்றுக்கொண்டார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், நாடு தற்போது இயல்பு நிலையில் இருப்பதாக கூறினாலும், இல்லாவிட்டாலும் நாட்டில் புதியதொரு நிலை தோன்றியுள்ளது. இதனால் நாட்டு மக்கள் தொழில்களை இழந்து, ஜீவனோபாயத்தினை இழந்து வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதன் காரணமாக மக்கள் பெரும் கவலையில் இருக்கின்றனர். நாம் இதற்கு பதிலளிக்க மாட்டோம். ஆனால் நாட்டு மக்கள் அதற்கான சரியான பதிலை வழங்குவர். கள்ளுத் தவறணை அனுமதிப்பத்திரம் வழங்கும் கலாச்சாரம் எம்மிடம் இல்லை. பாராளுமன்ற உறுப்பினர்களை ஏலத்தில் எடுத்தல் அவர்களுக்கு விசேட மானியம் வழங்குதல் போன்ற கலாச்சாரங்கள் எம்மிடம் இல்லை. வாரிசு முறையில் எமக்கு நம்பிக்கை இல்லை. 220 இலட்சம் மக்களின் வாக்குகளால் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார். ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் மதுபானம் இல்லாத யுகமொன்றை உருவாக்க முயற்சிப்போம்.


## பெறுகை அறிவித்தல்

**மாவத்தகம பிரதேச சபை**

மாவத்தகம பிரதேச சபைக்கு பேல் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தல் சார்பாக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

உங்களது விலைமனுக்களை 2024.08.30 பி.ப. 1.30 இற்கு அல்லது அதற்கு முன்பு செயலாளர், பிரதேச சபை, மாவத்தகம என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது அலுவலகத்தின் கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு வழங்கலாம்.

- தேவைப்படும் மாதிரிகள் மற்றும் விபரங்களை அலுவலக நேரங்களில் கேள்விப் படிவக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
- கேள்விப் படிவக் கட்டணம் ரூ. 1000.00
- கேள்விப் படிவம் விநியோகித்தல் 2024.08.29 வரை இடம்பெறும்
- கேள்விகள் திறத்தல் 2024.08.30 பி.ப. 2.00 இற்கு தலைமையகத்தில் நடைபெறும்.
- மேலதிக விபரங்களுக்கு தொ.பே. இல. 037-2299821ஐ அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.
- விலைமனுக்கள் உள்ளிடும் உறையில் பேல் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கள் என்று குறிப்பிடுதல் வேண்டும்.

2024.08.16ம் திகதி மாவத்தகம பிரதேச சபை அலுவலகத்தில்

**ஆர்.எம்.டி.கே. ரத்நாயக்க**
**செயலாளர்,**
**பிரதேச சபை.**
**மாவத்தகம.**


# சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்

(தலவாக்கலை குறூப் நிருபர்)

தலவாக்கலை பிரதேசத்தைச் சேர்ந்த செபஸ்டியன் அன்டன் இக்னேஷியஸ், அகில இலங்கை சமாதான நீதவானாக சத்திய பிரமாணம் செய்துகொண்டார்.



நுவரெலியா மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி கே.டபிள்யு. கேல்.எல்.பிரபுத்திகா லங்காஷினி முன்னிலையில் அவர் சத்தியப் பிரமாணம் செய்துக் கொண்டார்.

இவர் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம், வட்டகொடை தமிழ் மகா வித்தியாலயம், கிரேட்வெஸ்ன் தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் பாட ஆசிரியராக கடமையாற்றினார்.

தற்போது நுவரெலியா கல்வி வலயத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றுவதுடன் அப்பாட விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகின்றார்.


## ஊவா மாகாண சபை

## பெறுகை அறிவித்தல்

**ஊவா மாகாண விவசாய, நீர்ப்பாசன, விலங்கு உற்பத்தி மற்றும் நன்னீர் மீன்பிடி விவகார அமைச்சு**

பெறுகைக் குழு தலைவரான என்னால் கீழ் குறிப்பிடப்பட்ட தொழில்துறையை பூர்த்தி செய்வதற்காக நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் ICTAD (CIDA) பதிவு செய்யப்பட்ட கீழுள்ள தகுதியைக் கொண்ட ஒப்பந்ததாரர்களிடம் இருந்து தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மேலும், இந்த தொழில்துறை சார்ந்த அனைத்து விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் ஊவா மாகாண நீர்ப்பாசன இணையதளத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதால் https://irrigationdept.up.gov.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசித்து தேவையான அனைத்து விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு pdirrigationbd@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமும் குறித்த அறிவித்தலை பெற்றுக்கொள்ள முடியும்.

| குறிப்பு இலக்கம் | தொழில்துறையின் பெயர் | ICTAD பழைய/ புதிய தரம் | மீளளிக்கப்படும் விலைமனு பிணை (ரூபா) | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) | ஒப்பந்தக் காலம் |
|---|---|---|---|---|---|
| BOR 1R | முட்டை இனப்பெருக்க பிரிவை நிர்மாணித்தல் - பொரலந்த | C6 மற்றும் C5 | 249,000.00 | 5,000.00 | 90 நாட்கள் |
| BOR 7R | இனப்பெருக்கக் கோழிக் கூடு (40'* 20') புளொக் 3 மற்றும் 4 இன் நிர்மாணம் | C6 மற்றும் C5 | 122,000.00 | 5,000.00 | 90 நாட்கள் |

**ஜே.எம்.யு.கே. ஜயசேகர,**
**செயலாளர்/ பெறுகைக் குழு தலைவர்,**
**ஊவா மாகாண விவசாய, நீர்ப்பாசன, விலங்கு உற்பத்தி மற்றும் நன்னீர் மீன்பிடி விவகார அமைச்சு,**
**ரத்வத்த மாவத்தை – பதுளை.**
**2024.08.14**



## அரசாங்க சேவை பரஸ்பர சகாய சங்கம்

## 140வது ஆண்டு பொதுக்குழு கூட்டத்தை ஒத்திவைத்து கூட்டுவதற்கான அறிவிப்பு

இச்சங்கத்தின் 140ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 24.08.2024 சனிக்கிழமை கொழும்பு 07, ரோயல் கல்லூரியின் புதிய அரங்கில் நடைபெறவிருந்தபோதிலும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்புரையின் பிரகாரம் கூட்டம் நடைபெறாது எனத்தெரிவிக்கப்படுகிறது. அக்கூட்டம் 12.10.2024 அன்று அதே இடத்தில் நடைபெறும்.

நிர்வாகக் குழுவின் தீர்மானத்தின்படி அனைத்து உறுப்பினர்களும் 12.10.2024ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பேராசிரியர் எஸ். ஏ. என். எஸ். குமார**
**தலைவர்**
**2024.08.19**

**அ.சே.ப.ச.சங்கம்,**
**இல. 155/5, காசல் வீதி,**
**கொழும்பு - 08.**

**தொ.பே.** - 011-2685300
**மின்னஞ்சல்** - psmpa@sltnet.lk
**இணையம்** - www.psmpa.com

## பெறுகை அறிவித்தல்

**விலைமனுக்கோரல் காலத்தை நீடித்தல்**
**40 கி. வோட் கொள்ளளவுடைய நிகர கணக்கியல் சூரிய சக்தி அமைப்பை வழங்கல்**

**வீரக்கெட்டிய பிரதேச சபை**

**பெறுகை இலக்கம்: WPS/03/09/06/01**

2024.07.29 ஆம் திகதிய மேற்கூறிய பெறுகை அறிவித்தலின் விலைமனுக்களை கோரும் காலம் 2024 ஜூலை 29 ஆம் திகதி தொடக்கம் 2024 ஒகஸ்ட் 28 ஆம் திகதி மு.ப. 10.00 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**செயலாளர்**
**வீரக்கெட்டிய பிரதேச சபை, வீரக்கெட்டிய**
**2024.08.16**

The Housewives' companion
Classifieds on
Daily News

**2007ம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கீழ்க்காணும் கம்பனி 2024 மார்ச் 28ம் திகதி கூட்டிணைக்கப் படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது**

**கம்பனியின் பெயர்:**
ஏ. எம். டெக்நொலொஜீஸ் (பிவீடீ) எல்டீடி

**கம்பனியின் பதிவு இலக்கம்:**
PV 00297780

**பதிவு அலுவலக முகவரி:**
இல. 311, உஸ்வத்த வீதி, எரவ்வல, பன்னிப்பிட்டிய

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் விதிகளின் கீழ் 2024 ஓகஸ்ட் 13 முதல் அமுலுக்கு வருமாறு கீழ்க்காணும் கம்பனியின் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

கம்பனியின் பழைய பெயர் : டி.பீ.ஷிப்பிங் (பிரைவட்) லிமிட்டட்

கம்பனி இலக்கம் : PV00280280

பதிவு அலுவலகம் : இல.120, 120A, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்ல

கம்பனியின் புதிய பெயர் : ப்ரொபர்டி வன் (பிரைவட்) லிமிட்டட்

**சபையின் கட்டளைப் பிரகாரம்**
**செட்லைன் கோர்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**கம்பனி செயலாளர்கள்**

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

| ஒப்பந்த இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| RDA/DDG(C)/NP/ W&1/2024-01 | Supply of Dense Graded Aggregate Base Cours e(DGABC) on Kokuvil Vaddukoddai Road (0+500-1+000 km) |
| RDA/DDG(C)/NP/ W&1/2024-02 | Supply of Dense Graded Aggregate Base Course (DGABC) on Kokuvil Vaddukoddai Road (3+000-3+750 km) |
| RDA/DDG(C)/NP/ W&1/2024-03 | Supply of Asphalt Concrete (Wearing course) on Kokuvil - Vaddukoddai Road (0+500-1+000 km) |
| RDA/DDG(C)/NP/ W&1/2024-04 | Supply of Asphalt Concrete (Wearing course) on Kokuvil - Vaddukoddai Road (3+000-3+750 km) |

தேசிய போட்டி கேள்வி முறைமையின் கீழ் மேற்படி வேலைகளுக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றது. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 ஓகஸ்ட் 16 முதல் 2024 ஓகஸ்ட் 29 வரை RDA மற்றும் போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சின் இணையதளம் www.rda.gov.lk மற்றும் www.mohsl.gov.lkI பார்வையிடுமாறு ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வேண்டப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு (வடமாகாணம்),**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.**

**2015 இல. 05 தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் 131 பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் அறிவித்தல்**

## இலங்கை மக்களிடம் மன்னிப்புக் கோரல்

கண்டி நீதவான் 11 நீதிமன்றத்தின் வழக்கு இல. 52095/24 இன் கீழ் தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் தொடரப்பட்ட வழக்கில்,

1. தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி மருந்தகத்தை நடத்திச் செல்லல்
2. தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி மேற்கத்தைய மருந்துகள் களஞ்சியப்படுத்தல்

ஆகிய குற்றச்சாட்டுகள் 2 இற்காக 2024.06.14ம் திகதி கண்டி நீதவான் நீதிமன்றத்தின் இல. II இன் கீழ்காணும் பெயர் குறிப்பிடப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர்களால் குற்றத்தை ஏற்றுக் கொண்ட காரணத்தினால் அதற்காக எமது கம்பனிக்கு ரூபா 25,000 உம், ராமசந்திரன் சந்திரமோகன் என்பவருக்கு ரூபா 25,000 உம், அங்கிலிகெதர ரொஹான் இந்திக்க ஜயரத்ன என்பவருக்கு ரூபா 25,000 உம் என்ற வகையில் ரூபா 75,000 தண்டத் தொகையை செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் மேற்படி தண்டத் தொகை மேற்படி கம்பனி மற்றும் அதன் குற்றம் சாட்டப்பட்டவர்களால் செலுத்தப்பட்டதாகவும் அறிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறான குற்றம் எமது கம்பனியினால் அல்லது கீழே பெயர் குறிப்பிடப்படும் குற்றம் சாட்டப்பட்டவர்களான எம்மால் இதன் பிறகு மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும் இத்தால் தெரிவித்துக் கொள்வதுடன் மேற்கொள்ளப்பட்ட குற்றம் சம்பந்தமாக முழு இலங்கை வாழ் மக்களிடமும் மன்னிப்புக் கோருகிறோம்.

**சீஎப்சீ ஹெல்த் கெயா பிரைவட் லிமிட்டட்,**
**ராமசந்திரன் சந்திரமோகன்,**
**அங்கிலிகெதர ரொஹான் இந்திக்க ஜயரத்ன.**

## பெறுகை அறிவித்தல்

**ஊவா மாகாணத்தின் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழிலாளர்களுக்கான புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் உற்பத்தி செயற்பாட்டை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு சுயதொழில் இயந்திராதிகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் ரிதீபான நூல் நிறமூட்டும் நிலையத்தில் சாயம் கழிவுநீர் சுத்திகரிப்பு அலகினை நிர்மாணித்தல் - 2024**

ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரான என்னால் ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு 2024ம் ஆண்டிற்குத் தேவையான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் உருப்படிகளுக்காக உள்ளூர் உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் இறக்குமதியாளர்களிடமிருந்து கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | வகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்வி வைப்பு (ரூபா) |
|---|---|---|---|
| 01 | நூல் நிறமூட்டும் நிலையத்தின் சாயங்கள் கழிவுநீர் சுத்திகரிப்பு அலகை நிர்மாணித்தல் | 50,000.00 | 5000.00 |
| 02 | சுயதொழில் இயந்திராதிகள் | 30,000.00 | 3000.00 |

02. கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான மாதிரிப் பத்திரங்களை மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் கட்டணத்தை ஊவா மாகாண கைத்தொழில் பணிப்பாளருக்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் பெற்றுக் கொள்ளலாம்.

03. கேள்விகள் விநியோகித்தல், ஏற்றுக் கொள்ளல், திறத்தல் கீழ்க்காணும் திகதி மற்றும் நேரங்களில் இடம்பெறும்.

**கேள்விகள் விநியோகித்தல்:-** 2024.08.20 முதல் 2024.09.06 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்கள அலுவலகத்தில்

**கேள்விகள் ஏற்றுக் கொள்ளல்:-** 2024.09.09 பி.ப. 2.00 வரை ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாண கைத்தொழில் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில்

**கேள்விகள் திறத்தல்:-** 2024.09.09 பி.ப. 200 இற்கு ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் மாகாண கைத்தொழில் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில்

04. இது பற்றிய மேலதிக விபரங்களை ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்கு வருகைதந்து அல்லது எமது தொ.பே. இல. 055-2222607ஐ அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

2024.08.19ம் திகதி
**ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம்,**
**ஊவா மாகாண சபை.**
**பதுளை.**

**மாகாண கைத்தொழில் திணைக்களம்,**
**பெறுகைக் குழுத் தலைவர்.**

## சுகாதார அமைச்சு

### போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு

**வைத்தியர்களுக்கான சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான கேள்விமனுக் கோரல் 2024/2025**

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வைத்தியர்களுக்கான சிற்றுண்டிச்சாலையினை 2024/2025ஆம் ஆண்டின் ஒரு வருட காலப்பகுதிக்கு (எதிர்வரும் 12 மாதங்களுக்கு) நடாத்துவதற்கு திறமையும் தகுதியும் வாய்ந்த மனுதாரர்களிடமிருந்து இத்தால் கேள்விமனுக்கள் கோரப்படுகின்றன.

1. ஆர்வமுள்ள கேள்விமனு கோருபவர்கள் எழுத்து மூல விண்ணப்பம் மற்றும் உணவகத்திற்குரிய வியாபார பதிவு சான்றிதழின் பிரதியினையும் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு அவர்களுக்கு சமர்ப்பிப்பதன் மூலம் சிற்றுண்டிச்சாலை சேவைக்கான மீளப்பெறமுடியாத கேள்விக் கட்டணமாக ரூபா 1500/= ஐ மட்/போதனா வைத்தியசாலை நிதி உதவியாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடன், தேசிய அடையாள அட்டையையும் காண்பித்து கேள்வியில் கலந்து கொள்வதற்கான ஆவணங்களை 20/08/2024 ஆந் திகதி தொடக்கம் 30/08/2024 ஆந் திகதி வரையான அலுவலக வேலை நாட்களில் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
2. பூரணப்படுத்தப்பட்ட கேள்வி மனுக்கள் அனைத்தும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வைத்தியர்களுக்கான சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான கேள்விமனுக் கோரல் – 2024/2025" என எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் 02.09.2024 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அல்லது மட்/போதனா வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் (Tender Box) இடப்படல் வேண்டும்.
3. பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விமனுக்கள் அனைத்தும் 02.09.2024 ஆம் திகதியன்று காலை 10.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். திறக்கப்படும் நேரத்தில் கேள்விமனு சமர்ப்பித்தவர் அல்லது அவரின் பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கமுடியும்.
4. நிராகரிக்கப்பட்டோர் பட்டியலில் உள்ளோருக்கும் மற்றும் அரச ஒப்பந்தங்களை மீறி நடந்தவர்களுக்கும் கேள்விமனுக் கோரிக்கை பற்றிய ஆவணங்கள் வழங்கப்படமாட்டாது.
5. கேள்விமனுக் கோரிக்கை ஆவணங்களை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது அதனை நிராகரிப்பதற்குமான உரிமை கேள்விச் சபைக்குரியது.
6. மேலதிக தகவல்களை வைத்தியசாலை பிரதம கணக்காளரை 065-2222261, 065-2222262 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியும்.

**பணிப்பாளர்**
**போதனா வைத்தியசாலை,**
**மட்டக்களப்பு,**
**19.08.2024.**

## சுகாதார அமைச்சு

### போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு

**பொது சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான கேள்விமனுக் கோரல் 2024/2025**

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பொது சிற்றுண்டிச்சாலையினை 2024/2025ஆம் ஆண்டின் ஒரு வருட காலப்பகுதிக்கு (எதிர்வரும் 12 மாதங்களுக்கு) நடாத்துவதற்கு திறமையும் தகுதியும் வாய்ந்த மனுதாரர்களிடமிருந்து இத்தால் கேள்விமனுக்கள் கோரப்படுகின்றன.

1. ஆர்வமுள்ள கேள்விமனு கோருபவர்கள் எழுத்து மூல விண்ணப்பம் மற்றும் உணவகத்திற்குரிய வியாபார பதிவு சான்றிதழின் பிரதியினையும் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு அவர்களுக்கு சமர்ப்பிப்பதன் மூலம் சிற்றுண்டிச்சாலை சேவைக்கான மீளப்பெறமுடியாத கேள்விக் கட்டணமாக ரூபா 1,500/=ஐ மட்/போதனா வைத்தியசாலை நிதி உதவியாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடன், தேசிய அடையாள அட்டையையும் காண்பித்து கேள்வியில் கலந்து கொள்வதற்கான ஆவணங்களை 20/08/2024 ஆந் திகதி தொடக்கம் 30/08/2024 ஆந் திகதி வரையான அலுவலக வேலை நாட்களில் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
2. பூரணப்படுத்தப்பட்ட கேள்விமனுக்கள் அனைத்தும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பொது சிற்றுண்டிச்சாலை சேவைகள் வழங்குதல் –2024/2025" என எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் 02/09/2024 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அல்லது மட்/போதனா வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் (Tender Box) இடப்படல் வேண்டும்.
3. பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விமனுக்கள் அனைத்தும் 02/09/2024 ஆம் திகதியன்று காலை 10.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். திறக்கப்படும் நேரத்தில் கேள்விமனு சமர்ப்பித்தவர் அல்லது அவரின் பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கமுடியும்.
4. நிராகரிக்கப்பட்டோர் பட்டியலில் உள்ளோருக்கும் மற்றும் அரச ஒப்பந்தங்களை மீறி நடந்தவர்களுக்கும் கேள்விமனுக் கோரிக்கை பற்றிய ஆவணங்கள் வழங்கப்படமாட்டாது.
5. கேள்விமனுக் கோரிக்கை ஆவணங்களை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது அதனை நிராகரிப்பதற்குமான உரிமை கேள்விச் சபைக்குரியது.
6. மேலதிக தகவல்களை வைத்தியசாலை பிரதம கணக்காளரை 065-2222261, 065-2222262 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியும்.

**பணிப்பாளர்**
**போதனா வைத்தியசாலை,**
**மட்டக்களப்பு**
**19.08.2024**


# தந்தை செல்வா நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்திய அரியநேத்திரன்

*யாழ் . விசேட நிருபர்*



தந்தை செல்வா நினைவுத் தூபிக்குச் சென்ற, தமிழ் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் நேற்று(18) அஞ்சலி செலுத்தினார். தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது, தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

அதனை தொடர்ந்து நல்லூர் ஆலயத்திற்கு சென்று வழிப்பாட்டில் ஈடுபட்ட பாக்கிய செல்வம் அரியநேத்திரன், நல்லை ஆதீன குருமுதல்வரையும் சந்தித்து ஆசி பெற்றார்.

இதேவேளை, முல்லைத்தீவு வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டு மைதானத்தில் நேற்று (18) மாலை தமிழ் பொது வேட்பாளர் அறிமுக பொதுக்கூட்டம் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழில் திலித் ஜயவீரவின் முதலாவது பிரசார கூட்டம்



*யாழ் . விசேட நிருபர்*



சர்வசன அதிகார கூட்டணியின் முதலாவது அங்குரார்ப்பண தேர்தல் பிரசாரக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் றக்கா வீதியில் உள்ள இளங்கதிர் சனசமூக நிலைய மைதானத்தில் குறித்த பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில், ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர, பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, கெவிந்து குமாரதுங்க, காமினி வலேபொட, கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராத ஜகம்பத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சர்வசன அதிகார கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக, தாயக மக்கள் கட்சியின் தலைவரான தொழிலதிபர் திலித் ஜயவீர, நட்சத்திர சின்னத்தில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மனநலம் குன்றிய யுவதி பாலியல் பலாத்காரம்

*யாழ் . விசேட நிருபர்*

தனது சித்தப்பாவால் மனவளர்ச்சி குன்றிய யுவதி ஒருவர் பாலியல் துஸ்பிரயோகத்துக் குள்ளாக்கப்பட்டுள்ள சம்பவமொன்று, யாழ்ப்பாணத்தில் பதிவாகியுள்ளது.

சம்பவத்தில், யுவதியின் சித்தப்பா உள்ளிட்ட இரு இளைஞர்கள் என மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பாதிக்கப்பட்ட யுவதி சுகவீனமடைந்திருந்த நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசலையில் அனுமதித்தபோது, மருத்துவ பரிசோதனையில் யுவதி கர்ப்பமடைந்துள்ளமை தெரியவந்துள்ளது.

யுவதியின் தாயின் சகோதரியின் கணவர் (சித்தப்பா) மற்றும் இரு இளைஞர்களாக மூவரும் இணைந்து குறித்த யுவதியை கடந்தாண்டு (2023) நவம்பர் மாதம் முதல் பாலியல் துஸ்பிரயோகத்துக்குட்படுத்தி வந்துள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சில தடவைகள் கூட்டு பாலியல் பலாத்காரத்துக்கும் இந்த யுவதியை உட்படுத்தியுள்ளனர். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த நெல்லியடி பொலிஸார், யுவதியின் சிறிய தந்தை உள்ளிட்ட மூவரை கைதுசெய்து, பருத்தித்துறை பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில், சந்தேகநர்களை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார்.

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் போராட்டம்



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்களால், எதிர்வரும் 30 ஆம் திகதி போராட்டமொன்று முன்னெடுக்கப் படவுள்ளதாக, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் வடக்கு, கிழக்கு இணைப்பாளர் மதியழகன் சுகந்தி தெரிவித்துள்ளார்.

இந்தப் போராட்டம் வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் வடக்கு, கிழக்கு இணைப்பாளர் மதியழகன் சுகந்தியின் இல்லத்தில் நேற்று (17) நடைபெற்ற ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர்,

குறித்த போராட்டத்தில் பங்கேற்குமாறு அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# நகர்வலம்



### புத்தளம் மாவட்டத்தில் மினி சூறாவளி;

## மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் மக்களின் இயல்புநிலை பாதிப்பு

### 145 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 636 பேர் பாதிப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் மாவட்டத்தில் பல பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு (16) மழையுடனான மினி சூறாவளி காற்று வீசியதினால் பல மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன், பொதுக் கட்டடங்களின் கூரைகளும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சீரற்ற காலநிலையினையடுத்து, இடியுடன் கூடிய கடும் மழை காரணமாக புத்தளத்தில் அனைத்து பகுதிகளிலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

மினி சூறாவளி காற்று காரணமாக பாலாவி கற்பிட்டி பிரதான வீதியில் இருந்த பல மரங்கள் முறிந்து வீழ்ந்தன. பாலாவி, கரம்பை பகுதியில் பிரதான வீதியோரத்தில் காணப்பட்ட பெரிய மரம் முறிந்து பிரதான வீதியின் நடுவே வீழ்ந்ததால் அவ்வீதியுடனான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

கடும் மழையுடனான மினி சூறாவளி காற்றினால் புத்தளம் மாவட்டத்தில ஏழு பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட 26 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 145 குடும்பங்களைச் சேர்ந்த 636 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமை நேர அதிகாரி கூறினார். புத்தளம் மாவட்டத்தின் ஆராச்சிக்கட்டுவ, புத்தளம், முந்தல், கற்பிட்டி, வன்னாத்தவில்லு, சிலாபம், மஹாவெள ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 26 கிராம சேவகர் பிரிவுகளிலேயே இவ்வாறு கடும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

மேலும், மினி சூறாவளி காரணமாக கரம்பை தேத்தாப்பொல ஐயனார் ஆலயத்திற்கு அருகாமையில் இருந்த பாரிய மரமொன்று சரிந்து வீழ்ந்ததில் அந்த ஆலயத்தின் கூரை பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், ஆலயத்தின் பிரதம குருக்கள் குடும்பத்துடன் தங்கிருந்த வீட்டின் கூரையும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. மேலும், புத்தளம் உலுக்குளம் வித்தியாலயத்தில் உள்ள மூன்று மாடிக் கட்டடத்தின் கூரையும் இந்த மினி சூறாவளி காற்று காரணமாக சிறிய அளவில் சேதமடைந்திருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

இதனால் புத்தளம் நகரத்தில் சில பகுதிகளில் மாத்திரம் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்ததுடன், மின்சார சபையின் ஊழியர்கள், புத்தளம் நகர சபை ஊழியர்கள், புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகள் இணைந்து மின்சார கம்பிகளில் சிக்கிக் கொண்டிருந்த தகரங்களை நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்தனர்.

## ஜனாதிபதி வரலாற்று சிறப்புமிக்க ஜயஸ்ரீ மஹா போதியை தரிசித்தார்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க (17) காலை அநுராதபுரம் வரலாற்று சிறப்புமிக்க ஜய ஸ்ரீ மகா போதியை தரிசித்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டார்.

அநுராதபுரத்தின் வரலாற்று சிறப்புமிக்க புனித தலத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி, முதலில் வண, பல்லேகம ஹேமரதன நாயக்க தேரரைச் சந்தித்து நலம் விசாரித்ததுடன் சிறிது நேரம் கலந்துரையாடினார்.

பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மத வழிபாடுகளில் ஈடுபட்டதுடன், மகாசங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினர்.

அநுராதபுரத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க லங்காராம விகாரையின் விகாராதிபதி வண, ரலபனாவே தம்மஜோதி நாயக்க தேரர் விசேட அனுசாசனை உரை நிகழ்த்தியதுடன், இந்த நாட்டின் புத்த சாசனத்தைப் பாதுகாக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிகள், நிச்சயமாக அவரின் எதிர்கால வெற்றிகளுக்கு வழிவகுக்கும் என சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, வரலாற்று சிறப்புமிக்க ஜயஸ்ரீ மஹா போதியை தரிசிக்க வருகை தந்திருந்த மக்கள் மத்தியில் சென்ற ஜனாதிபதி, அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, கஞ்சன விஜேசேகர, பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, லசந்த அழகியவன்ன, பாராளு மன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, துமிந்த திஸாநாயக்க, எஸ்.எம்.சந்திரசேன, சம்பத் அத்துகோரள, எச்.சி.முத்துகுமாரன, வடமத்திய மாகாண ஆளுநர் மஹீபால ஹேரத், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர்களான மனுஷ நாணயக்கார, பீ.ஹெரிசன், முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### மாத்தறை மாவட்டத்தில்

## எலிக்காய்ச்சலால் 05 பேர் மரணம்; 171 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

**(வெலிகம தினகரன் நிருபர்)**

மாத்தறை மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் 171 பேர் இனம் காணப்பட்டுள்ளதுடன் இவர்களுல் 5 பேர் மரணமடைந்துள்ளதாக மாத்தறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம். டப்ளியூ. ஏ.கே மெதவத்த தெரிவித்தார். மாத்தறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாத்தறை மாவட்ட இணைப்புக் குழு கூடத்திலேயே அவர் இவ்வாறு சுட்டிக் காட்டினார். எலிக் காய்ச்சல் என இனம் காணப்பட்ட பின்னர் உரிய முறையில் சிகிச்சைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும். இல்லையெனில் வேறு வகையான பல்வேறு பயங்கர நோய்களுக்கு அவை காரணமாக அமைந்துவிடும் என வைத்தியர்கள் எச்சரிக்கின்றனர். எலியின் சிறுநீராலேயே பெரும்பாலும் இந் நோய் பரவுவதாக தெரிவிக்கப்படுகின்றது. தோட்ட வேலை மற்றும் வயல் வேலை செய்பவர்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

## இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்தவின் ஏற்பாட்டில் மொரகல்ல வீதிக்கு காபட் வசதி

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**



களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சருமான பியல் நிஷாந்தவின் ஏற்பாட்டில் மேல் மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் காபட் வீதியாக அபிவிருத்தி செய்யப்பட்ட மொரகல்ல முதலாவது ஒழுங்கை வீதி அண்மையில் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வு மேல் மாகாண ஆளுநர் எயார் மார்ஷல் ரொஷான் குணதிலக மற்றும் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவின் தலைமையில் இடம்பெற்றது. பிரமுகர்கள் மக்களுடன் இணைந்து நாடாவை வெட்டி வீதியை திறந்து வைத்தனர்.

## மு.காவின் புத்தளம் இளைஞர் அமைப்பாளர் ரிஷாதுடன் இணைவு

**புத்தளம் தினகரன் நிருபர்**



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புத்தளம் நகர முன்னாள் இளைஞர் அமைப்பாளர் எம்.என்.எம். நஸ்ரக் அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இணைந்து கொண்டார்.

கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் அவர் மக்கள் காங்கிரஸுடன் இணைந்துகொண்டார். இதன்போது கருத்து தெரிவித்த அவர், புத்தளம் மாவட்ட மக்களின் நன்மை கருதியும், தமது ஆதரவாளர்களின் வேண்டுகோளுக்கு அமையவுமே இந்த முடிவை தாம் எடுத்ததாகவும் தெரிவித்தார்.

## 'சந்தோசம் 88' மலர் வெளியீடு




டாக்டர் வி.ஜி. சந்தோசத்தின் 88ஆவது பிறந்தநாளை முன்னிட்டு "சந்தோசம் 88" என்ற மலரினை தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் திருமிகு அப்பாவு வெளியிட, கவிப்பேரரசு பத்மஸ்ரீ வைரமுத்து முதல் பிரதியினைப் பெற்றுக் கொண்டார். அருகில் விழா நாயகர் விஜிபி குழுமத்தின் தலைவர் டாக்டர் வி.ஜி.சந்தோசம், சுகஜீவ ஊழியங்களின் தலைவர் டாக்டர் வி.ஜி செல்வராஜ், தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி இயக்குனர் முனைவர் அருள் அவ்வை, மல்லை தமிழ்ச் சங்கத்தின் தலைவர் மல்லை சத்யா, விஜிபியின் மேலாண்மை இயக்குனர் விஜிபி ரவிதாஸ், முதன்மை இயக்குனர் விஜிபி ராஜாதாஸ் இயக்குனர் விஜிபி பாபுதாஸ், கவிஞர் அப்துல் காதர் உட்பட பல்வேறு தமிழறிஞர்கள் கலந்துகொண்டுள்ளதை படத்தில் காணலாம்.

## அமெரிக்க தூதுவர் தலைமையிலான அதிகாரிகள் ஹம்பாந்தோட்டை விஜயம்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் மற்றும் தூதரக அதிகாரிகள் அண்மையில் (16) ஹம்பாந்தோட்டை மாவட்ட வர்த்தக சம்மேளனத்திற்கு நல்லெண்ண விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

தூதுவரின் இவ்விஜயத்தின்போது மாவட்டத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்துவதற்கு USAID அமைப்பினால் முன்னெடுத்துவரும் திட்டம் மற்றும் தூதரகத்தின் ஆதரவுடன் ஹம்பாந்தோட்டை மாவட்ட வர்த்தக சம்மேளனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் மற்றும் பெண் தொழில் முயற்சியாளர்கள் ஊக்குவிப்பு திட்டங்கள் உட்பட மாவட்டத்தின் சமூக, பொருளாதார நிலைமைகள் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது.

இந்த சந்திப்பில் மாவட்ட வர்த்தக சம்மேளனத்தின் சிரேஷ்ட உப தலைவர், பணிப்பாளர் அசேல சிந்தக, பெண் தொழில் முயற்சியாளர் சங்கத்தின் தலைவி, பணிப்பாளர் டிலானி சந்தமினி, ஸ்தாபகத் தலைவர் அஸ்மி தாஸிம், பணிப்பாளர் நாயகம் டிலர் நாதுகல உட்பட பலரும் இந்தநிகழ்வில் கலந்துசிறப்பித்தனர்.



இலங்கை தமிழ் கலைஞர்களின் ஒன்று கூடல் வாதுவ Ocean Ripples Resort நேற்று முன்தினம் 17ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. புதிய அலைக்கலை வட்டத்தின் தலைவரும் கலைஞர்கள் ஒன்றுக்கூடலின் இணைப்பாளருமான Shanmu Sanmu இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தமை பாராட்டத்தக்கது.மேற்படி கலைஞர்கள் ஒன்றுகூடலில் மீன்வாழ் குறுந்திரைப்படம் ஊடாக கதாநாயகனாக அறிமுகமான எம். மணிராஜ் கலந்து கொண்டார்.

படம் மொஹமட் நஸார்

## கொழும்பு ஸாஹிரா கல்லூரி ஏற்பாட்டில் கால்பந்தாட்ட போட்டி

**ருஸைக் பாரூக்**



கொழும்பு ஸாஹிரா கல்லூரி கால் பந்தாட்டக் குழு ஒழுங்கு செய்துள்ள 10, 12 மற்றும் 14 வயதுக்குட்பட்ட பிரிவுகளுக்கான பாலர் பிரிவு கால் பந்து போட்டி ஆகஸ்ட் மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

100 வருடங்களுக்கும் மேலாக கால்பந்தாட்டத்தில் வரலாற்றைக் கொண்ட சாஹிரா கல்லூரி தேசிய அணிக்கு மிகவும் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்து, இலங்கை கால் பந்தாட்டத்திற்கு சிறந்த வீரர்களை உருவாக்கி பங்களிப்பு செய்துள்ளமை விசேட அம்சமாகும்.

இப்போட்டியில் ஆறு பாடசாலைகள் பங்கேற்கின்றன. அதில் சாஹிரா கல்லூரி, தாருஸ்ஸலாம் கல்லூரி, வெஸ்லி கல்லூரி, புனித ஜோசப் கல்லூரி, கேரி கல்லூரி மற்றும் கேட்வே கல்லூரி ஆகியனவாகும். *Zahira Veterans* அணி போட்டியின் பிரதான அனுசரணை வழங்க முன்வந்துள்ளது. அதன் தலைவர் ஹுசைன் ஆசாத் அனுசரணையை ஸாஹிரா கல்லூரி உதைபந்தாட்ட குழுவின் தலைவர் பி.எஸ்.ஏ. ரபீக் இடம் கல்லூரி நீச்சல் வளாகத்தில் அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கையளித்தார்

சாஹிரா கல்லூரி அதிபர் ரிஸ்வி மரிக்கார், திட்டத் தலைவர் எப். எம்.நஸ்ருல்லா, தேசிய கால்பந்து வீரர் நைனா மொஹமட் மற்றும் ஸாஹிரா கல்லூரி பழைய மாணவர் சங்க தலைவர் மொஹமட் காசிம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

டி20 உலகக் கிண்ணம்:

# இலங்கை மகளிர் இளையோர் இந்தியாவுடனான 'ஏ' குழுவில்



மலேசியாவில் அடுத்த ஆண்டு நடைபெற்றவுள்ள 19 வயதுக்கு உட்பட்ட மகளிர் டி20 உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி நடப்புச் சம்பியன் இந்தியா, மேற்கிந்திய தீவுகள் மற்றும் மலேசிய அணிகள் இடம்பெற்றிருக்கும் ஏ குழுவில் ஆடவுள்ளது.

இரண்டாவது முறையாக நடைபெறும் இளையோர் உலகக் கிண்ணத்தில் மொத்தம் 16 அணிகள் இடம்பெற்றுள்ளன. எதிர்வரும் 2025 ஜனவரி 18 ஆம் திகதி ஆரம்பமாகி பெப்ரவரி 2 ஆம் திகதி வரை போட்டிகள் நடைபெறவுள்ளன.

நான்கு குழுக்களாக நடைபெறும் ஆரம்ப சுற்றை அடுத்து ஒவ்வொரு குழுவிலும் முதல் மூன்று அணிகளும் இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்ட சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு முன்னேறும்.

இதனைத் தொடர்ந்து அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன.




ஹவ்லொக் மைதானத்தில் நேற்று முன்தினம் (17) நடைபெற்ற டயலொக் ரக்பி லீக் ஏ பிரிவுக்கான போட்டியில் இசிபதான கல்லூரியை 6–3 என்ற புள்ளிகளால் வீழ்த்தி புனித பீட்டர்ஸ் கல்லூரி சம்பியன் கிண்ணத்தை வென்றது. டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்கவிடம் இருந்து புனித பீட்டர்ஸ் கல்லூரியின் அணித்தலைவர் துலாஜ் நவோத்ய வெற்றிக் கிண்ணத்தை பெறுவதை காணலாம். இந்த இரு அணிகளும் லீக் போட்டிகள் முழுவதும் தோல்வியுறாத அணிகளாக நீடித்த நிலையிலேயே நேற்று முன்தினம் பலப்பரீட்சை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

Dialog SCHOOLS RUGBY
Dialog

## அறுகம்பே அரை மரதனில் உள்நாட்டுடன் வெளிநாட்டு போட்டியாளர்கள் பலர் வெற்றி

**பாலமுனை, பெரியநீலாவணை விசேட நிருபர்கள்**



அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியம் நடாத்திய அறுகம்பே அரை மரதன் ஓட்டப்போட்டியின் 21.1 கிலோமீற்றர் போட்டியில் ஆண்கள் பிரிவில் அவிசாவலையை சேர்ந்த விமல் காரியவசமும் பெண்கள் பிரிவில் கென்யாவைச் சேர்ந்த அனிக்கா பேலிமும் முதலிடத்தை வென்றனர்.

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் பொருட்டு இந்தப் போட்டி பொத்துவில் அறுகம்பேயில் நேற்று (18) நடைபெற்றது. இதில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த 260 வீர, வீராங்கனைகள் பங்கேற்றிருந்தனர். 10 கிலோமீற்றர் பிரிவில் நடந்த போட்டியில் ஆண்கள் பிரிவில் டீ.எம். எரந்த தென்னகோன் முதலிடத்தை பெற்றதோடு பெண்கள் பிரிவில் இங்கிலாந்தைச் சேர்ந்த பெல்லா றுஸல் முதலிடத்தை வென்றார். இதே போன்று சிறுவர்களுக்கான 5 கிலோமீற்றர் போட்டியில் கே. றினோஸும் வயதானவர்களுக்கான 5 கிலோமீற்றர் போட்டியின் ஆண்கள் பிரிவில் ஏ.ஏஸ். மொஹானி மற்றும் பெண்கள் பிரிவில் அலன் கொல்ப் முதலிடத்தை வென்றனர்.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் பிரதம அதிதியாக பங்கேற்றார்.

## டயலொக் தங்கக் கிண்ண கரப்பந்து கோல்டன் பேர்ட்ஸ், MAS வசமானது



ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்ட போட்டியில் ஆடவர் பிரிவில் ரதவான கோல்டன் பேர்ட்ஸ் விளையாட்டுக் கழகமும் பெண்கள் பிரிவில் MAS விளையாட்டுக் கழகமும் சம்பியன் கிண்ணத்தை வென்றன.

கொழும்பில் நடைபெற்று வரும் விளையாட்டுத் திருவிழாவின் ஓர் அங்கமான விமானப்படை உள்ளக அரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை (16) இந்தப் போட்டிகள் இடம்பெற்றன.

இதில் ஆடவர் இறுதிப் போட்டியில் ருவன்வெல்ல, இராஜசிங்க விளையாட்டுக் கழகத்தை கோல்டன் பேர்ட்ஸ் அணி மூன்று செட்களால் வீழ்த்தியதோடு மகளிர் இறுதிப் போட்டியில் கலிகமுவ ஹிந்தரமணி விளையாட்டுக் கழகத்தை MAS அணி தோற்கடித்தது.

Dialog
ஜனாதிபதி
தங்க கிண்ணம்

# சர்வதேச செய்திகள்



# போர் நிறுத்த முயற்சி தொடரும் நிலையில் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல் அதிகரிப்பு

## மீண்டும் பிராந்தியத்திற்கு விரைந்தார் அன்டனி பிளிங்கன்

காசாவில் தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருக்கும் இஸ்ரேல், நேற்று (18) காலையில் மேற்கொண்ட குண்டு மழையில் குறைந்தது 21 பேர் கொல்லப்பட்டிருக்கும் நிலையில், போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கும் முயற்சியாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் மீண்டும் ஒருமுறை பிராந்தியத்திற்கு விரைந்துள்ளார்.

காசாவில் 317 ஆவது நாளாகவும் இஸ்ரேலின் தாக்குதல்கள் நேற்று தொடர்ந்தன. மத்திய காசாவின் டெயிர் அல் பாலாஹ்வில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் தாய் மற்றும் அவரது ஆறு குழந்தைகள் கொல்லப்பட்டிருப்பதாக உள்ளூர் தரப்பினரை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இதேநேரம் நுஸைரத் அகதி முகாமில் உள்ள வீடு ஒன்றையும் இஸ்ரேலிய போர் விமானம் இலக்கு வைத்துள்ளது. இதில் நால்வர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்தது.

மறுபுறம் வடக்கு காசாவில் ஜபலியா அகதி முகாமில் உள்ள தபீல் மற்றும் அபூ காரா குடும்பத்திற்குச் சொந்தமாக குடியிருப்பு தொடர்மாடிகள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலை அடுத்து நால்வரின் சடலங்கள் மீட்கப்பட்டதாக அங்குள்ள வபா செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெற்காக கான் யூனிஸ் நகரின் கிழக்கு பக்கமாக முசப்பா குடும்பத்திற்கு சொந்தமான வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் மேலும் நால்வர் கொல்லப்பட்டு அறுவர் காயமடைந்துள்ளனர்.

எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரில் சம காலத்தில் இஸ்ரேல் பல இடங்கள் மீது பீரங்கி தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தி இருப்பதாகக் கூறப்படுகிறது.

போர் நிறுத்தம் ஒன்றுக்கான இராஜதந்திர முயற்சிகள் இடம்பெற்று வரும் நிலையிலேயே இஸ்ரேலின் தாக்குதல்களும் அதிகரித்துள்ளன.

காசா போரை முடிவுக்குக் கொண்டுவருவது மற்றும் காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பில் எகிப்து தலைநகர் டோஹாவில் இரண்டு நாட்கள் பேச்சுகள் இடம்பெற்ற நிலையில் அந்தப் பேச்சுவார்த்தை இந்த வாரத்தில் எகிப்து தலைநகர் கெய்ரோவில்இடம்பெறுகிறது.

அமெரிக்கா, எகிப்து மற்றும் கட்டாரின் மத்தியஸ்தத்தில் இடம்பெறும் இந்தப் பேச்சுக்கு இஸ்ரேல் தனது பிரதிநிதிகளை அனுப்பியபோதும் ஹமாஸ் அமைப்பு பங்கேற்கவில்லை.

எனினும் பேச்சுவார்த்தையின் விபரங்கள் கட்டாரில் உள்ள ஹமாஸ் அரசியல் பிரிவு அலுவலகத்திற்கு அறிவுறுத்தப்படுகிறது.

இந்நிலையில் காசா போர் வெடித்தது தொடக்கம் 10 ஆவது முறையாக பிளிங்கன் நேற்று (18) பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

போர் தரப்புகள் இடையிலான இடைவெளியை நிரப்பும் முயற்சியை அமெரிக்கா முன்னெடுத்து வரும் நிலையிலேயே பிளிங்கனின் வருகை இடம்பெற்றுள்ளது.

இந்தப் போர் பிராந்தியத்திற்கு பரவும் அச்சுறுத்தல் அதிகரித்திருக்கும் சூழலில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதை அவசரப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. டெஹ்ரானில் வைத்து கடந்த ஜூலை 31 ஆம் திகதி ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே படுகொலை செய்யப்பட்டதற்கு இஸ்ரேல் மீது பழிதீர்ப்பது குறித்து ஈரான் சூளுரைத்து வருகிறது.



இந்தப் போர் காசா பகுதியை சின்னபின்னமாக்கி இருப்பதோடு பெரும் மனிதாபிமான அவலத்துக்கு மத்தியில் அங்குள்ள மக்கள் பாதுகாப்பான இடத்தைத் தேடி அங்குமிங்கு அலைகின்றனர்.

'கடலைத் தவிர எமக்கு எதுவும் மிஞ்சவில்லை' என்று டெயிர் அல் பலாஹ்வில் தமது குடும்பத்துடன் அடைக்கலம் பெற்றிருக்கும் டமர் அல் புரை குறிப்பிட்டார்.

'நாம் இடம்பெயர்ந்து களைப்படைந்துவிட்டோம். மக்கள் டெயிர் அல் பலாஹ் மற்றும் அல் மாவாசியின் குறுகிய நிலப்பகுதிக்குள் தள்ளப்பட்டுள்ளார்' என்று ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு குறிப்பிட்ட அவர் வெறுமனே 1.5 கிலோமீற்றருக்கு அப்பால் இஸ்ரேலிய டாங்கிகள் நிலைகொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

'இந்த டாங்கிகள் தொடர்ந்து முன்னேறி வந்தால் எங்கே போவது என்று யாருக்கும் தெரியாது' என்றார்.

காசாவில் இஸ்ரேலால் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருக்கும் பகுதி காசாவின் ஒட்டுமொத்த நிலப்பகுதியில் வெறுமனே 11 வீதமான இடமாக உள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது. இஸ்ரேல் சென்ற பிளிங்கன் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் மற்ற மூத்த அதிகாரிகளை சந்திக்கிறார்.

போர் நிறுத்த உடன்பாடு ஒன்று எட்டுவது குறித்து நெதன்யாகு அலுவலகம் மற்றும் அமெரிக்கா நம்பிக்கை வெளியிட்டுள்ளன. எனினும் அமெரிக்கா வெளியிட்டிருக்கும் நம்பிக்கை 'ஏமாற்றுவதாக உள்ளது' என்றும் நெதன்யாகுவின் புதிய நிபந்தனைகள் பேச்சுவார்த்தையை சிதறடிக்கும் முயற்சி என்றும் ஹமாஸ் குற்றம்சாட்டியுள்ளது.

போர் நிறுத்த உடன்படிக்கை போரை முழுமையாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று ஹமாஸ் வலியுறுத்தும் அதேநேரம் தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றையே இஸ்ரேல் வலியுறுத்தி வருகிறது.

கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கை ஒன்றை எட்டியபோதும் கூட மீண்டும் போர் புரியும் உரிமையை இஸ்ரேல் கோரி வருகிறது என்று ஹமாஸ் அதிகாரி ஒசாமா ஹம்தான், அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு தெரிவித்துள்ளார். அதனை எந்த ஒரு பலஸ்தீனரும் எவ்வாறு ஏற்பது என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். காசாவில் ஒரு வருடத்தை நெருங்கும் போரில் இதுவரை 40,000க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கானவர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

தெற்கு காசாவில் புதைகுழிகளை தோண்டும் நஜி அபூ ஹதம், போர் ஆரம்பித்தது தொடக்கம் இடைவிடாது வேலை பார்த்து வருவதாக குறிப்பிட்டுள்ளார். 'அடக்கம் செய்வதற்கு தொடர்ந்தும் இடமில்லை. நாம் களைப்படைந்துள்ளோம்' என்று அவர் அல் ஜசீரா செய்தி நிறுவனத்திடம் கூறினார். 'இந்தப் போர் முடிவுக்கு வருவதை நான் எதிர்பார்த்திருக்கிறேன்' என்றும் கூறினார்.

## ஆபிரிக்காவில் 18,700 குரங்கம்மைச் சம்பவம்



ஆபிரிக்காவில் இந்த ஆண்டு பதிவான குரங்கம்மைச் சம்பவங்களின் எண்ணிக்கை 18,700 ஐ தாண்டியுள்ளது. ஆபிரிக்க ஒன்றிய சுகாதார நிறுவனம் இந்தத் தகவலை வெளியிட்டது.

ஒரே வாரத்தில் 1,200 நோய்த் தொற்றுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இவ்வாண்டு ஆபிரிக்காவில் குரங்கம்மைத் தொற்றால் சுமார் 540 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொங்கோ குடியரசு அதிகம் பாதிக்கப்பட்ட நாடாக அடையாளங்காணப்பட்டுள்ளது. அங்கு ஒரே வாரத்தில் சுமார் 1,000 நோய்த் தொற்றுச் சம்பவங்கள் பதிவானதோடு 24 பேர் உயிரிழந்தனர்.

ஆபிரிக்காவுக்கு அப்பால் ஸ்வீடனிலும் பாகிஸ்தானிலும் குரங்கம்மைத் தொற்றுச் சம்பவங்கள் பதிவாகின. உலகளவில் நாடுகள் விழிப்புநிலையை அதிகரித்துள்ளன. குரங்கம்மைத் தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகளையும் எடுத்துவருகின்றன.

## லெபனானில் இஸ்ரேலிய தாக்குதல்களில் சிரிய அகதிகள் பத்துப் பேர் உயிரிழப்பு



தெற்கு லெபனானில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் 10 பேர் கொல்லப்பட்டிருப்பதாக லெபனான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இஸ்ரேல் மற்றும் லெபனான் எல்லையில் நீடித்து வரும் மோதல்களில் அதிக உயிரிழப்புக் கொண்ட தாக்குதல்களில் ஒன்றாக இது பதிவாகியுள்ளது.

நபித்தி நகரில் சிரிய அகதிகள் தங்கி இருந்த கட்டடம் ஒன்றே நேற்று முன்தினம் (17) இடம்பெற்ற தாக்குதல்களில் இலக்கு வைக்கப்பட்டிருப்பதாக லெபனான் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. ஹிஸ்புல்லா ஆயுத களஞ்சியம் ஒன்றையே தாக்கியதாக இஸ்ரேல் கூறியதை அந்த கட்டட உரிமையாளர் மறுத்துள்ளார்.

கொல்லப்பட்டவர்களில் ஒரு பெண் மற்றும் அவரது இரு குழந்தைகள் அடங்குவதாக லெபனான் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

'எனது சகோதரியின் இரு குழந்தைகள் கொல்லப்பட்டதோடு மற்றொருவர் அவசர சிகிச்சை பிரிவில் உள்ளார். எனது மற்றொரு மருமகனும் அவசர சிகிச்சை பிரிவில் உள்ளார்' என்று ஹுஸைன் அல் ஹுஸைன் என்பவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார். 'அவர்கள் உறங்கிக் கொண்டிருந்தார்கள் அவர்களுக்கு எதவும் தெரியாது. அவர்கள் இளம் தொழிலாளர்கள் இஸ்ரேலியப் படை அவர்களையே இலக்கு வைத்தது' என்றும் அவர் குறிப்பிட்டார். இதற்கு பதிலடியாக ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பு வடக்கு இஸ்ரேலில் கிப்புட்ஸ் மற்றும் ஏனைய இஸ்ரேலிய நிலைகள் மீது சரமாரி ரொக்கெட் குண்டுகளை வீசியுள்ளது. முதல் தாக்குதலில் எவருக்கும் பாதிப்பு ஏற்படாதபோதும் இரண்டாவது தாக்குதலில் இரு இஸ்ரேலிய படையினர் காயமடைந்ததாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை கூறியது.

கடந்த ஒக்டோபர் 7 இல் காசாவில் போர் வெடித்தது தொடக்கம் லெபனான் எல்லையில் இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பு கிட்டத்தட்ட தினசரி பரஸ்பரம் தாக்குதல்களை நடத்தி வருகின்ற நிலையில் அது முழு அளவில் போர் ஒன்றாக வெடிக்கும் அச்சுறுத்தல் நீடித்து வருகிறது.

## பிலிப்பைன்ஸ்–ஜெர்மனி பாதுகாப்பு உடன்பாடு



இராணுவ பயிற்சி மற்றும் ஆயுதக் கொள்முதல் தொடர்பிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கு பிலிப்பைன்ஸ் மற்றும் ஜெர்மனி இணக்கம் கண்டுள்ளன. இது தொடர்பில் இரு நாட்டு பாதுகாப்பு அமைச்சர்களும் கலந்துரையாடியுள்ளனர்.

இதனடிப்படையில் ஆயுதக் கொளவனவு மற்றும் இராணுவ பயிற்சி குறித்த பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இவ்வருட இறுதிக்குள் கைச்சாத்திடப் போவதாக இரு நாடுகளும் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளன.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தங்களில் பிலிப்பைன்ஸ் அண்மையில் கைச்சாத்திட்ட நிலையில் ஜெர்மனியுடனும் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்ள இணங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தென் சீனக் கடற்பரப்பில் சீனாவுடன் முறுகல் நீடிக்கும் நிலையிலேயே பிலிப்பைன்ஸ் இந்த பாதுகாப்பு ஒத்துழைப்புகளை செய்த வருகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 19ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.